ஸ்ரீ

தஞ்சை

ஸ்ரீபிரமானந்தசுவாமிகள்பேரில்

# நான்மணிமாலை.

~~146~~ 142

இஃது

திருநெல்வேலிஜில்லா தச்சநல்லூர் ரயிட்டர்

மகா-ள-ள-ஸ்ரீ பாலுநாயுடு அவர்கள் கனிஷ்ட குமாரரும்

சிந்துபூந்துறைவாசரும் பென்சன்போலீஸ்

இன்ஸ்பெக்டரும் GLN

நெட்டூர்ப்புராணாசிரியருமான 14592

மகா-ள-ள-ஸ்ரீ

B. B. நாராயணசுவாமி நாயுடு அவர்களால்

இயற்றி,

தஞ்சை

ஸ்ரீசங்கரவிலாச சாரதாமந்திர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

ருதிரோத்காரி ஞு.

1923

All Rights Reserved.

MAHARAJA SERFOJI'S SARASWATI ... RECEIVED 25 MAY 1931 ... TANJORE



ஸ்ரீ கணேசர்.



ஸ்ரீ சாரதாம்பாள்.



ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி.



ஸ்ரீ நடராஜர்.

॥ ओ३म् ॥



ஸ்ரீ விஷ்ணுபாவா அவர்கள்.

(ஸ்ரீ பிரஹ்மாநந்தஸ்வாமிகளின் பரமகுரு).

॥ ओ३म् ॥



ஸ்ரீமாந் வே. குப்புஸ்வாமிராஜு அவர்கள்.

॥ ओ३म् ॥



ஸ்ரீபிரஹ்மநிஷ்டபண்டித

வெ. குப்புஸ்வாமி மஹராஜ் அவர்கள்.

ओ३म्



ஸ்ரீ பிரஹ்மநிஷ்டபண்டித
வே. குப்புஸ்வாமிமஹராஜ் அவர்கள்,

ओ३म्



ஸ்ரீஸ்ரீ வி. பிரஹ்மானந்தஸ்வாமிகள்.

॥ ओ३म् ॥



ஸ்ரீ ஸ்ரீ வி. பிரஹ்மாநந்தஸ்வாமிகள்.

(ஆசிரமம்).



தஞ்சை ஸ்ரீபிரஹ்மநிஷ்டபண்டித வெ குப்புஸ்வாமிராஜு என்னும்
பூர்வாசிரமநாமம்பூண்டிருந்த

## ஸ்ரீ வி. பிரஹ்மாநந்தஸ்வாமிகள்.

S. S. V. S. M. PRESS. TANJORE.

உ

தஞ்சை

# ஸ்ரீ பிரமானந்த நான்மணிமாலை.

## சிறப்புப்பாயிரம்.

இராமநாதபுரம்ஜில்லா திருச்சுழித்தாலுகா
பாலவநத்தம் போஸ்ட்டு கூத்திபாறை
**மகா-ள-ள-ஸ்ரீ மதுரகவி முத்துகிருஷ்ணராமானுஜதாசக்
கவிராயரவர்கள் சாத்துக்கவி.**

பத்திரப்பா ரதிநாரா யணசாமி
பகர்பிரமா னந்தக்கோமேல்
சித்திரப்பா நான்மணிப்பா மாலையொன்று
செய்தனனால் செப்பக்கேட்டார்
எத்திரப்பா வலருமுறை யின்பொழுகு
நன்பெரிய யாப்பியாவும்
புத்திரப்பா வாகுமெனப் பூணித்துப்
பாணித்துப் புகன்றிட்டாரே.

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

தஞ்சை கல்யாணசுந்தரம் ஹைஸ்கூல் தலைமைத்தமிழ்ப்பண்டிதர்
மகா-ா-ா-ஸ்ரீ L. உலகநாதபிள்ளை அவர்கள் இயற்றிய

## நேரிசையாசிரியப்பா.

நானில வரைப்பின் வானிமிர் வரைகள்
நகரணி காண்பா னுடிய வந்தென
மஞ்சினந் தவழு மாடமலி தஞ்சைப்
பதிபுரி தவத்தின் பயனெனத் தோன்றி
யறிவுநூல் பலவும் பளகற நாடி
நூனு முறையுஞ் சால்புறத் தெரித்திங்
கன்பு மருளுந் தாங்கி யெவர்க்கு
மின்னகை தழீஇய தன்னயின் முகனமர்ந்
தினியன நல்லன பயன்றர வுரைத்து
நல்வழிப் படுத்து நன்ன ராளன்
நில்லா வுலகி னீர்மை யொரீஇப்
பிரம நிஷ்டை பேணினன் வழாஅப்
பிரமா னந்தப் பெரியோன் றிருவடிக்
கானு வன்பி னுன்மணி மாலைப்
பாத்திறன் விளங்க யாத்திட் டணிந்தனன்
பல்வளங் கனிந்த நெல்லையம் பதியிற்
கொந்தண வும்பொழிற் சிந்துபூந் துறைக்கண்
டாழ்விலாப் புலமைமிக் கூர
வாழுநா ராயண சாமிநா வலனே.

ஸ்ரீ ஸத்குருப்யோ நம:

# முகவுரை.

இந்நூல் தஞ்சைமாநகரில் நிஷ்காம்யகர்மம், பக்தி என்னும் மார்க்கத்தினும், இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், (நிற்விகற்ப) சமாதி என்னும் யோக மார்க்கத்தினும், விவேகம் வைராக்கியம் சட்சம்பத்தி (சமம், தமம், உபரதி, திதீக்ஷை, சமாதானம், சிரத்தை), முமுக்ஷுத்துவம் என்னும் ஞானசாதனமார்க்கத்தினும் மிகச்சிறந்து ஞான சூரியனைவிளங்கி அவதாரசரீரத்துக்கேற்ப தமிழ் சமஸ்கிருத முதலிய பலபாஷைகளிலும் பாண்டித்தியமும் பெற்று தம்மைவந்தடைந்த சிஷ்ய கோடிகளுக்கு அவரவர்கள் பக்குவத்திற்குத்தக்கவாறு ஒழுக்கம், கர்மம், பக்தி, யோகம், ஞானம் இவைகளை உபதேசித்தும் நடந்துகாட்டியும் மேற்சொல்லிய சாதனங்களுக்குறிய அநேகநூல்களை தமிழில் வெளியிட்டும் உபன்னியாசஞ்செய்தும் ஸ்ரீ சங்கரவிலாசசாரதாமந்திரத்தை ஸ்தாபகம் செய்தவருமாகிய ஸ்ரீ பிரஹ்மநிஷ்டபண்டித ஸ்ரீமாந் வெ. குப்புஸ்வாமிமஹாராஜ் யென்னும் பூர்வாச்சிரமநாமம் பூண்டிருந்த ஸ்ரீ பிரஹ்மாநந்தஸ்வாமிகள் அவர்களைப்பற்றியது. இதில் ஸ்ரீ சுவாமிகளின் பிரதமசிஷ்யரும் ஸ்வாமிகளின் கைங்கிரியத்தில் பெரும்பாலும் ஈடுபட்டவரும் ஷை மந்திரத்தின் டிரஸ்டிகளிலொருவராயிருந்து ஸ்ரீ சுவாமிகள் உத்திரவின்படி மானேஜிங்டிரஸ்டிஸ்தானத்தையும் வகித்து அதிசிரத்தையுடன் நடத்திவருபவருமாகிய திருநெல்வேலிஜில்லா வண்ணார்பேட்டை மகா-ா-ா-ஸ்ரீ சு. பாக்கியம்பிள்ளை அவர்கள் எழுதிய ஸ்ரீ சுவாமிகளின் திவ்வியசரித்திரமும் ஸ்வாமிகளின் சிஷ்யரில் ஒருவரான திருநெல்வேலிஜில்லா சிந்துபூந்துறை பென்ஷன் போலீஸ் இன்ஸ்பெக்டரும், கவிச்சக்கரவர்த்தியுமாகிய ஸ்ரீமாந் B. B. நாராயணசுவாமி நாயுடு அவர்கள்செய்த நான்மணிமாலைமுதலியனவும்சேர்ந்திருக்கின்றன. இது ஸ்ரீ சுவாமிகளின் சிஷ்யர்பிரசிஷ்யர்களுக்கும் பக்தர்களுக்கும் மற்றுமுள்ள ஆஸ்திகர்களுக்கும் இன்றியமையாததாக விருப்பதால் ஷை மந்திரத்தின் மூலமாய் அச்சியற்றி ஸ்ரீ ஸ்வாமிகள் அந்தந்தக்காலங்களில் யெழுந்தருளியிருந்தபடி படங்களும், ஸ்ரீ ஸ்வாமிகளின் ஞானாசிரியரின்படமும், ஸ்ரீ ஜெகத்குரு சங்கராச்சாரியஸ்வாமிகளின் படமும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ சுவாமிகள் செய்திருக்கும் நூல்களை வாசிப்பவர்களுக்கும், உபாசிப்பவர்களுக்கும் இவைகள்யாவும் ஓர் இன்றியமையாத சாதனமாகவே யிருக்கின்றன. சுபம்! சுபம்!! சுபம்!!!

இப்படிக்கு,

வெ. ரெங்கசாமி ராஜு.

ஸ்ரீகணேசாய நம:

தஞ்சைமாநகரம் ஸ்ரீபிரஹ்மநிஷ்டபண்டித

வெ. குப்புஸ்வாமிராஜு அவர்கள் என்னும்

பூர்வாச்சிரமநாமம்பூண்டிருந்த

# ஸ்ரீ வி பிரஹ்மாநந்தஸ்வாமிகளின்

# திவ்வியசரித்திரம்.

நித்திய சுகமா யெங்கு நிலவுநற் பேற்றை யார்க்குஞ்
சத்திய மொழியா லன்று வுரைத்தசங் கரனே யின்று
முத்தியைத் தருமந்நூலைத் தமிழ் மொழி செய்த தஞ்சைச்
சத்தியப் பிரஹ்மாநந்தன் றுண்மலர் தலைமேற் கொள்வாம்.

இனிய ஞானசாதனத்தைப் பழகுதற்குரிய எவ்வுலகத்தினுஞ் சிறந்த இப்பூவுலகத்தில் தம்மையடைந்தவர்களின் தாபத்தையும்பாவத்தையும் போக்கும் காவேரிநதியாற் சூழப்பெற்ற சகலவளப்பங்களும்நிறைவுற்று சோழவளநாட்டின் தலைநகராய் புராணங்களால் சிறப்பித்துக் கூறப்பெற்றதுமான தஞ்சைமாநகரில் கலி-நாலாயிரத்து தொளாயிரமாண்டு க்ஷத்திரியகுலத்தில் காஸ்யப கோத்திரத்திலுற்பவித்தவரும் வர்ணாச்சிரமதருமங்களை கற்புக்கரசியாகிய பாப்பம்மாள் என்னும் தமது தருமபத்தினியாருடன் வழுவாதியற்றிவருபவராய் ஸ்ரீமந்நாராயணனிடத்தில் அநந்நிய பக்தியும் ருக்வேத சாகையுமுடையவராய் வெங்கிடஸ்வாமி ராஜு வெனப்பெயரிய ஓர் சாத்வீககுணசிரேஷ்டரிருந்தார். அவருக்கு சிலநாள் மகப்பேறில்லாது ஈசுவரனை சதாதியானம்செய்து பிரார்த்தித்துவருநாளில் அவருக்கு பலஜென்மங்களில் முயன்று செய்ததவப்பயனே ஓருருவெடுத்துவந்தாற்போல கலி-4968-ஞு நாலாயிரத்துதொளாயிரத்தறுபத்தெட்டாமாண்டு-அக்ஷயஞு பங்குனிமாசம் இரண்டாந்தினத்தில் குருவாரமும் பூர்வபக்ஷமும் நவமிதினத்தமும் திருவாதிரை நக்ஷத்திரம் நாலாம்பாதமுங்கூடிய சுபதினத்தில் விருட்சிகலக்கினத்தில் சின்மயாநந்த சிவசொருபத்திருவருளே யோர்மகவா யவதரித்தது.

அந்தத்திவ்வியமங்களசொரூபமகவவதரித்த தினத்தன்றே இத்தென்மொழிவழங்கும் நாடெங்கும் மயக்கவுள்ளத்தினையுடைய புறச்சமயங்கள்யாவுமொழித்து சைவ வேதாந்தந் தழைத்தோங்குமெனுங் குறிப்பையுணர்ந்த பல்வகைப் பிராணிகளும் இன்பசாகரமடைந்தன.

சிவசொரூபமாகிய தம்மது மகவிற்கு ஜாதகர்மாதிகிரியைகளை உத்தம அந்தணர்களைக் கொண்டு நடாத்தி அரிய மானுடப்பிறவி பெற்றதனுலாம்பயன்பெற்றோமெனப் பெருமகிழ்வெய்தியிருந்தனர். (இம்மகவு அவதரிக்குங்காலத்தில் ஷை ஸ்வாமிகளின் தகப்பனர் ஸ்ரீராமசந்திரமூர்த்திநவக்கிரகபூஜைசெய்த 9-ங்கல் என்கிற தேவிபட்டணத்தில் உத்தியோகமாயிருந்தாரென்னத் தெரியவருகிறது). பின்பு அம்மகவிற்கு குப்புஸ்வாமி என்னும் நாமகரணமிட்டு குறிப்பிட்டகாலங்களில் அன்னப்பிராசனஞ் செய்து திருவேங்கடம் போய் சௌளமுதலியபிரார்த்தனைகளை விதிப்படி செய்து முடித்து ஸ்ரீதஞ்சைக்கு வந்து அன்போடு அம்மகவை வளர்த்து வந்தனர்.

அம்மகவு நான்கு சாதனங்களோடு கூடிய மோக்ஷயிச்சையுடைய உத்தமாதிகாரியினுள்ளத்தில் வளரும் ஞானமிருதம்போல வளர்ந்துவந்தது. அம்மகவிற்கு இளைய சகோதரர்கள் மூவரும் சகோதரிகள் இருவரும் இருந்தார்கள்.

அப்பால் ஸ்ரீசுவாமிகளுக்கு ஐந்து வயதானதும் தகப்பனர் அக்ஷராப்பியாசஞ் செய்து வைத்தார். பன்னிரெண்டு வயதுவரை தமிழ், தெலுங்கு, சம்ஸ்கிருதம், மராட்டி, கன்னட முதலிய பல பாஷைகளையும் கற்று அப்பால் ஆங்கிலமும் தனது 17-வயது வரை கற்று பின்பு தானகவே ஹிந்தி, மலையாளம், சிங்களம், பெங்காலி முதலிய இன்னும் பல பாஷைகளையுங் கற்றுணர்ந்தார்கள்.

ஸ்ரீசுவாமிகளுக்கு ஐந்து வயதானது முதலே தான் தனிமையாயிருந்து நிஷ்டை கூடுவதுண்டு. (இதனுல் முன் ஜென்மப்பிரபலமாம்). அப்படியிருக்கும் நாளில் ஓரிரவு மற்றச்சகோதரர்களுடன் நித்திரை செய்யுஞ் சமயம் ஸ்ரீசுவாமிகள் உட்கார்ந்து நிஷ்டை கூடியிருக்க தாயார் விழித்து குழந்தாய் ஏன் நித்திரை செய்யாது உட்கார்ந்திருக்கிறுயென வினவ, சும்மா உட்கார்ந்திருக்கிறேனென்றுரைத்து அவர்காண சயனித்துக் கொண்டார்கள். இதுவுமல்லாது சிற்சிலசமயம் ஜீவர்கள் இம்மானிட ஜென்மத்தை மறுபடியும் மறுபடியும் தாங்கி அநுபவிக்கும் கஷ்ட நிஷ்டூரங்களையும் இஜ்ஜன்மத்தைப் போக்கவேண்டி ஜீவர்கள் அல்லும் பகலும் செய்ய வேண்டிய தீவிரபிரயத்தினங்களையும் சிந்தித்துப் பரிதாபமேலீட்டால் ஷை கஷ்டங்கள் தனக்கே வந்தவாறு படுக்கையில் விழுந்து வயிற்றுவலி வந்தவர்கள்போல பிரள்வதுமுண்டு. அச்சமயம் சுவாமிகள் அன்னை குழந்தைக்கு வயிற்றுவலி வந்ததோ வென்று விசாரிக்குங்காலத்தில் ஒன்றுமில்லை யென்று சொல்லி சயனிப்பார்கள். இப்படி பலதினங்களில் தம்மது குழந்தை பத்மாசனமிட்டுட்கார்ந்து நிஷ்டை கூடுவதை தாயார்கண்டு அச்சமும் அன்பும் ஆநந்தமுமேலிட்டு தனது பர்த்தாவிடம் சொல்லிகளித்திருந்தார்கள்.

பின்பு பதினெட்டாவது வயதானதும் ஸ்ரீசுவாமிகளுக்கு சகல குணபூஷணமாகிய கிருஷ்ணம்மாள் யென்னும் கன்னிகையை விவாகஞ் செய்தார்கள். பத்தொன்பதாவது வயதுமுதல் இருபத்துமூன்றுவது வயதுவரை தாமிருக்குமிடம் தமது தாய் தந்தையர் முதலியோருக்குத் தெரியாது திருவிடைமருதூர் (மத்தியார்ஜனம்) முதலிய ஸ்தலங்களில் வசித்து வந்தார்கள். அக்காலத்தில் ஸ்ரீசுவாமிகளுடன் திருநெல்வேலி சைவவேளாள குலத்துதித்த சர்வகுணசீலராயும் மகா விரக்தியுள்ளவராயும் கல்வியிற் சிறந்தவராயுமுள்ள ஆறுமுகம் பிள்ளை என்னும் ஒரு பெரியவரிருந்தார். இவர் ஸ்ரீசுவாமிகளுடன் அநேகமாயோரிடத்திலேயே தங்கியிருக்கிறதும் காலந்தவராமற் ஸ்ரீமருதப்பரைதரிச்சிக்கிறதுமாக விருக்கும்நாளில் ஆறுமுகம் பிள்ளையவர்கள் தனக்கு இன்னும் ஜென்மம் உண்டாவென்று ஸ்ரீசுவாமிகளை வினவ இன்னும் ஒரு ஜென்மம்உண்டென்று உத்தரவானதை ஆறுமுகம் பிள்ளையவர்கள் கேட்டு இன்னுஞ் ஜென்மமாவென்றேங்கி ஸ்ரீசுவாமிகளையே தியானித்துக்கொண்டிருந்தார்கள். பின்பு சிலகாலத்தில் ஆறுமுகம் பிள்ளையவர்கள் பரகதியுடைந்தார்கள்.

பின்னர் ஸ்ரீசுவாமிகள் திருவிடைமருதூருக்குச் சமீபத்திலுள்ள மூங்கில் வனத்தில் யாருமறியாத மறைவானஸ்தானத்தில் நிஷ்டைகூடியிருந்து இரண்டுதினத்திற்குப்பின் விழித்து பசிநோய்வருத்த (இருக்குமிடந்தேடி யென்பசிக்கே யன்னமுருக்கமுடன் கொண்டுவந்தாலுண்பேன்)என்னும் செய்யுளின்படி சகித்திருக்க ஸ்ரீமருதப்பரே கிழப்பிராஹ்மணவுருக்கொண்டு வந்து அப்பா குழந்தாய் இவ்வனத்தில் தனித்திருந்து பசியாலுமிக இளைத்திருக்கிறாய் இவ்வந்நத்தை உண்டு இளைப்புநீங்கி திருவிடைமருதூர்போவாயென அப்படியே ஐயர் கொடுத்த பொதிச்சோற்றை புசித்து இளைப்பு நீங்கவும் ஐயரும் அந்தர்த்தானமானார். அதுகண்டு ஸ்ரீசுவாமிகளும் வந்தவர் மருதப்பரே யென்று திருவருளை வியந்து ஈசனாணையின்படி திருவிடைமருதூர்வந்தார்கள்.

ஸ்ரீசுவாமிகளுக்குபன்னிரெண்டாவது வயதில் தஞ்சாவூர் அரண்மனை சரஸ்வதிமாலில் உள்ள ஸ்ரீகுருகீதை என்னும் மிக அருமையான கிரந்தம் (பனைஓலை ஏட்டுப்பிரிதி) ஒன்று தனக்கு கிடைத்தது. அதுமுதல் உண்மையை உரைக்கும் ஞானாசிரியர் எங்குளார் என்னும் தேட்டம் நாளுக்குநாள திகரித்துக் கொண்டிருக்க பின்பு சுவாமிகளிருக்குமிடம் பலநாள் விசாரணையால் தெரிந்து ஸ்ரீசுவாமிகளின் தாயாரும்(ஸ்ரீபரதனைப்போலொத்த)ஸ்ரீசுவாமிகளின் அடுத்த இளையசகோதரரும் திருப்புடைமருதூரில் ஸ்ரீசுவாமிகளைத் தெரிசித்துமிகுந்த அன்போடு தஞ்சைக்கு யெழுந்தருளவேண்டுமென பிரார்த்திக்க அவர்கள் அன்பிற்கிசைந்து அவர்களுடன் தஞ்சைக்கெ

மூர்ந்தருளி யிருக்கும் நாளில் ஞானாசிரியரை யடையவேண்டுமெனும் விருப்பமதிகரிக்க மேற்படி தஞ்சாவூர் மஹாராஜ குலகுருவின் பரம்பரையிலவதரித்து ஞானைஸ்வரிய சம்பன்னராய் விளங்காநின்ற விஷ்ணுபாவா என்னும் ஓர் குருமூர்த்தியிருக்கிறார் என்பதை அறிந்து அவரது சந்நிதானத்தையடைந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்து ஐயனே! அரையனே! எம் குலவிறைவனே! நித்தியமும், சுத்தமும், நிராபாசமும், நிராகாரமும், நிரஞ்சனமும், நித்திய போதமும், சிதாநந்தமுமான பிரஹ்மமாகிய குருமூர்த்தியே! அடியேனை ஞானோபதேசஞ்செய்து திருவடிக்காளாக்கி இரக்ஷித்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க. ஆசிரியரும் மனமகிழ்ந்து ஸ்ரீசுவாமிகளின் அதிதீவிரபக்குவத்தையும் பின் நடக்கவேண்டிய உத்தம யேற்பாடுகளையுந் திருவுளங்கொண்டு கிருபாநோக்கஞ்செய்து சமீபத்தில் அழைத்து அஞ்சேலென்றருளி(சித்திரைமீ பௌர்ணமை யன்று) ஞானோபதேசம் அஸ்தமஸ்தகசையோக பூர்வம் செய்தருளினர். செய்தருளவும் ஸ்ரீமத் குப்புஸ்வாமிகள் இயற்கையாகவே அவதாரபுருஷராகையால் ஞானபூமி ஏழினுள் நான்காவது பூமியாகிய இனி தேகம் வாராதவிதேகமுத்தியையுடைய கூடஸ்தாபின்னவகண்டாகாரப்பிரஹ்மமாய் விளங்கினர்.

பின்னர் ஸ்ரீகுருவின் வாக்கியத்தாலும் எடுத்துக்கொண்டவவதாரத்திற் செய்யவேண்டிய லோகோபகாரமான காரியங்களைச் செய்யவேண்டுமென திருவுளங்கொண்டு முதலில் தமது பரமாசிரியராகிய ஸ்ரீபரமஹம்ச பரிவிராஜகாச்சாரியவர்ய ஸ்ரீராபசசந்திர மோர்காம்கார்பாவா அவர்கள் சமாதி ஆலயத்திருப்பணி முடித்துப் பின்னர் யதீந்திரயோகீஸ்வரலோககுரு ஸ்ரீசங்கரபகவத்பாதாசாரியாள் ஸ்ரீவித்தியாரண்யமுனீஸ்வரர் முதலியோர் வடமொழியிற் செய்த கிரந்தங்களை தென்மொழியில் சுலோகார்த்தம் வியாக்கியானம் டிப்பணி(நோட்டு)இதுகளால் யாவரும் எழிதிலறியும்படி ஸ்ரீபஞ்சதசி (பஞ்சதசப்பிரகரணம்), ஸ்ரீவிருத்திப்பிரபாகரம், ஸ்ரீவிருத்திரத்நாவலி(வேதாந்தநூல்), ஸ்ரீவிசாரசாகரம், ஹடயோகப்பிரதீபிகை (யோகநூல்), ஸ்ரீவிசாரசந்திரோதயம் (வேதாந்தநூல்), ஸ்ரீசிவஞானபோதம், தத்துவப்பிரகாசிகை உரையுடன், ஸ்ரீபாலபோதம், ஸ்ரீநாரதபக்திசூத்திரம், ஸ்ரீநந்திகேசுவரகாசிகை, ஸ்ரீசிவயோகப்பிரதீபிகை, ஸ்ரீசுருதிஷட்லிங்கசங்கிரகம், கைவல்யோபநிடதம், அமிர்தபிந்தூபநிடதம், சுகரகசியோபநிடதம், ஸ்கந்தோபநிடதம் செய்யுள், ஸ்ரீபகவத்கீதை, கர்மகீதை, ஸப்தசுலோகிகீதை, ஸ்ரீசிவபஞ்சாக்ஷரவிளக்கம், ஸ்ரீராமமந்திரார்த்தம், ஸ்ரீகணேசஷோடசநாமஸ்தவம், ஸ்ரீஜகத்குருஆதிசங்கராசாரியர் சரித்திரம், செய்யுள் வசனம், தனித்தனி, ஸ்ரீபிரஹ்மவிதாசீர்வாதபத்ததி, தருக்ககௌமுதி நியாயபதார்த்தம் பதினாறுடன், தத்துவமஸிமகாவாக்கிய வுபதேசம்

(உபநிஷத்), விவேகசிந்தாமணி(வேதாந்தபரிச்சேதம்), அபரோக்ஷாநுபூதி (வேதாந்தம்), ஆத்மபோதமும் தத்துவபோதமும், ஸ்ரீபஞ்சீகரணமுதலியன 27-புத்தகங்கள் சேர்ந்தது, உத்தரகீதை, ஸ்ரீராமகீதை, ஸ்ரீகுருகீதை, ஸ்ரீதேவிகீதை, ஸ்ரீசங்கரவித்யாரண்யாஷ்டோத்தரசதநாமம் (கிரந்தம், நாகரம், தமிழ், தனித்தனி), ஸ்ரீகுர்வஷ்டோத்தரசதநாமாவலி (நாகரம், கிரந்தம், தமிழ்), ஸ்ரீசங்கரநீலகண்டாசாரியசம்வாதம், ஸ்ரீபிரஹ்மநாமாவலி செய்யுள், ஸ்ரீபிரஹ்மநாமாவலி(நாகரம், கார்டு), ஸ்ரீநாராயணஸ்தோத்திரம் (கார்டுநாகரம்), ஸ்ரீநாமர்ாமாயணமும் நாராயணஸ்தோத்திரமும்(தமிழ்), ஸ்ரீஇராமாயணசூர்ணிகை(நாகரி, தமிழ், தனித்தனி), ஸ்ரீகாயத்ரீராமாயணம் (நாகரம்), என்னும் அச்சியற்றிய இவ்வருமையானநூல் (சாஸ்திரங்)களையும் மற்றும்:—1. அஷ்டாத்யாயி என்னும் பாணினி வியாகரணம் தமிழ் உரையுடன், 2. ஜீ ன்முக்திவிவேகம்தமிழ்மொழிபெயர்ப்பு, 3. வைஷ்ணவ அஷ்டாக்ஷரமந்திரார்த்தசங்கிரகம் தமிழ், 4. ஸ்ரீகுருபுஜங்கஸ்தோத்திரம் சுலோகமும் தமிழும், 5. கணேசகீதை விரிவான தமிழுரையுடன், 6. அவதூதகீதை தமிழுரையுடன், 7. அவதூதசம்வாதம் ஷை, 8. பிரசிநோத்தரரத்நமாலிகை ஷை, 9. பூர்வமீமாம்ஸா அர்த்தசங்கிரகம் தமிழ் மொழிபெயர்ப்பு, 10. யதீந்திரமததீபிகை தமிழ்மொழிபெயர்ப்பு குறிப்புரையுடன், 11. கணேசாஷ்டகம், சாரதாஷ்டகம், சற்குருஸ்தவம் சுலோகமாத்திரம், 12. அஷ்டாவக்கிரகீதை, 13. பாதஞ்சலயோக சூத்திரம் தமிழுரையுடன், 14. தர்க்கசூத்திரம் தமிழ் மூலமாத்திரம், 15. சர்வஞ்ஞோத்தரம் தமிழுரையுடன், 16. சுவாத்மநிரூபணம் ஷை, 17. ஆத்மாநாத்மவிவேகம் ஷை, 18. சதாசாரம் ஷை, 19. யோகதாராவலி ஷை, 20. சர்வவேதாந்த சாரசங்கிரகம் ஷை, 21. சாங்கியசூத்திரம் ஷை, 22. ராமாயணத்திருப்புகழ், 23. ராமாயண வம்மானை, 24. சுகரம்பாசம்வாதம் தமிழ், 25. ஹனுமான் ஜோசியம் தமிழ், 26. அஜீர்ணபாஸ்கரம்தமிழ், (உசு) இருபத்தாறும் தமிழில் மொழிபெயர்த்து தமது திருக்கரத்தாலேயே வரைந்தும் தம்சகோதரர்களால் அச்சியற்றச் செய்தும் தம்மைவந்தடைந்த பக்தசிகாமணிகட்கெல்லாம் அந்நாதிகளளித்து அவரவர் பக்தவத்திற்கும் விருப்பத்திற்கும் தக்கவாறு கருமம், பக்தி, ஞானம், யோகம் இவைகளை கருணையோடருளிச் செய்தும் தமது சிஷ்யகோடிகளுக்கு வேதாந்த படனம் தருககசாஸ்திரபடனம் இவைகளை அருளிச்செய்தும் வந்தார்கள். பின்னர் ஸ்ரீசுவாமிகளின் அன்னையாரும ஸ்ரீசுவாமிகளின் இரண்டு மகவும்தருமபத்தினியாரும் ஒருவர்பின்னொருவராய் பரகதியடையவும், சிலநாட்சென்றபின்னர் (ஸ்ரீராமசந்திரமூர்த்திக்கு ஸ்ரீபரதனைப்போன்றவருமாகிய) கோவிந்தஸ்வாமி யென்னும் தம்பியும் பரகதியடைந்தார். பின்னர் ஸ்ரீசுவாமிகள் பூபிரதக்ஷணமாகிய மகாயாத்திரை செ

ய்ய திருவுளங்கொண்டார்கள். அவ்வமயம் தந்தையார் தமதுவயோதிகத்தன்மையையும் தமது புத்திரசிகாமணியாகிய ஸ்ரீசுவாமிகள் கங்காயாத்திரைக்கு எழுந்தருளுவதற்கு திருவுளங்கொண்டிருப்பதையும் நினைந்து தமது மகவாயவதரித்த ஸ்ரீசுவாமிகளிடம் சொல்லாமலேமனவாட்டமுற்றிருந்தார்கள். அக்குறிப்பை ஸ்ரீசுவாமிகள் திருவுளங்கொண்டு எனது தந்தையே தங்களின் சரீர அந்தியகாலக்கடனைநானேயிருந்து செய்கிறேன் என்று உத்தரவாக தந்தையார் மிகவும் திருப்தியோடிருந்தார்கள். இது நடந்து இருபது தினத்தில் ஸ்ரீசுவாமிகளின் திருமுன்னரே தந்தையார் ஸ்ரீமந்நாராயண நாராயணவென்னும் நாமஸ்மரணையுடன் ஏகாதசி திதியன்று பரகதியடைந்தார். அவர்கட்குரிய நிரியாணக்கடன்களை விதிப்படி தமது இரண்டுசகோதரர்களுடன் முடித்துவிட்டு வானப்பிரஸ்தாசிரமத்தை கைக்கொண்டுமகாயாத்திரையாய் மேற்குச்சமுத்திரக்கரையோரமாயுள்ள சகலஸ்தலங்களையும் தெரிசித்து ஸ்ரீபஞ்சவடியி(நாசிக்)ல் தங்கி அங்குள்ள பிரஹ்ம ஸ்ரீநாராயண ஜோஸியர் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீதேவிகீதையை அங்குள்ளார்க்குபதேசித்தும் வடமொழியிலுள்ளதை இனிய தமிழில் மொழிபெயர்த்தும்பின்னர் துவாரகாபுரிமார்க்கம் குருக்ஷேத்திரமுதலியஸ்தலங்களை தெரிசித்தும் ஸ்ரீகாசிக்கெழுந்தருளி ஒருவருஷம் அங்குள்ள சிஞ்ஞாசுகளுக்கும் பக்தர்களுக்கும் வேதாந்தபடனஞ்செய்தும் அங்குள்ள உத்தமசிரேஷ்டமண்டலீகஸ்வாமிகளால் ஸ்ரீபிரஹ்மநிஷ்டபண்டித வெ. குப்புஸ்வாமிமஹாராஜ்யென்னும் பட்டங்கொடுக்கப்பெற்று யாவரும்போற்ற சிஷ்யர்குழாங்களுடன் ஸ்ரீஹரித்துவார முதலிய க்ஷேத்திரவாசமுஞ்செய்து பெரிய மேளா வென்னும் உற்சவத்திற்குஹரித்துவாரத்திலெயே எழுந்தருளி அங்குள்ள சகல சாதுக்களாலும் கொண்டாடப்பெற்று ஒன்றரைவருஷ(18 மாச)த்தில் இத்தென்னாடு செய்த புண்ணியத்தால் மறுபடியும் சோழதேசத்திலுள்ள ஸ்தலங்களை தெரிசித்துக்கொண்டு பாண்டிய நாட்டிலுள்ள ஸ்தலங்களையுந்தெரிசிக்கதிருவுளங்கொண்டு இராமேஸ்வர யாத்திரையை முடித்துப்பின்னர் திருநெல்வேலிக்குச் சமீபித்த வண்ணார்பேட்டை என்னும் நகரத்திற்கெழுந்தருளினார்கள்.

அதன் பின்னர் அங்குள்ள அடியவர்குழாங்களுடன் ஸ்ரீசுவாமிகளின் பாதசேவனமேகதியாகக்கொண்டவரும் ஸ்ரீசன்னிதானத் திருமுன்னரே இலக்கணம் இலக்கியம் தருக்கம் வேதாந்த முதலிய சாஸ்திரங்களை ஐயந்திரிபுஅறக்கற்றும் நாஞஜீவவாதக்கட்டளை, கீதாசாரத்தாலாட்டு முதலிய நூல்களுக்கு விருத்தியுரை செய்தும்,

அஞ்சைவெல் வடியாரமரர்மால்பிரம ரளப்பருங் கணங்கள்தற் சூழ
மஞ்சைவெல் குழலி யுமைசிருர்மகிழ மருவிடுங் கைலைவிட் டெழுந்து
தஞ்சையில் மனுட வடிவுகொண் டெமது தழைதவிர்த்தருட்குருவாகி
விஞ்சைசால் குப்புசாமிமாமுனியாய் விளங்கிடும் பானடிபணிவாம்.

என்னும் இவைமுதலிய பாக்களால் சதாஸ்தோத்திரஞ்செய்து கொண்டிருக்கும் ஸ்ரீ ராமஸ்வாமிஐயா என்னும் சிஷ்யருடனும் திருக்குற்றாலம் என்னும் க்ஷேத்திரத்தில் சாரல்(சாற்)காலமுழுவதும் தங்கியிருந்தார்கள். அந்நாளில் ஒருதினத்தில்(வழக்கத்தின்படி) அருணோதய காலத்திற்கு ஏழரைநாழிகைக்குமுன் சயனம் விட்டெழுந்து தம்முடன் ஒருஅடிமை தீபம் (அரிக்கன்லைட்)கொண்டுவர ஒரு பர்லாங்தூரம் அங்குள்ள மலைச்சாரிலபோய் மலவிசர்ச்சனஞ் செய்துகொண்டிருக்க சமீபத்தில் தீபத்துடன் ஸ்ரீசுவாமிகள் உட்கார்ந்திருக்கும் பாறைக்கும் சற்று உயரமான பாறையில் நின்று கொண்டிருக்கும் அடிமை ஸ்ரீசுவாமிகளிடத்தில் எண்தையனே! இதோ அடிமையின் எதிரில் சுவாமிகள் வலதுபக்கத்தில் அடிமையை நேரே வெகுண்டதும் பயங்கரத்தை யுண்டுபண்ணுவதுமான பார்வையுடன் உட்கார்ந்து கொண்டிருக்கிற வியாக்கிரத்தைநோக்கியருளவேண்டும் இவ்விடத்தைவிட்டு வேறிடத்திற்கு எழுந்தருளல் வேண்டுமென வெகு நயபயபக்தியுடன் விண்ணப்பிக்க தமதுதிருக்கரத்தால் சமிக்ஞை செய்து (பயப்படாதே யென்னும் குறிப்பு காட்டி)மலவிசர்ச்சனத்தை முடித்துக்கொண்டெழுந்தார்கள். உடனே புலியும் எழுந்து தென்திசையிற்போய்மறைந்தது. பின்னர் ஸ்ரீசுவாமிகளும் அடிமையும் சித்திராநதிக்கரையடைந்து சௌசம் தந்தசுத்தி முதலியதை முடித்துக்கொண்டு அடிமையை கிருபாநோக்கஞ் செய்து துளசிதாசர் வியாக்கிரத்தைப்பார்த்து ஹே ! வியாக்கிரமே நீ எதற்காக யென்னிடம் க்ரோதங்கொண்டு பாயவருகின்றாய் உன்னிடமுள்ளது என்னிடமில்லையே என்செய்யப்போகின்றாய் யெனவும்வியாக்கிரம் சாந்தமாய் தாசர் திருவடியை வந்துமுகர்ந்துகொண்டுநின்றது முதலிய சரிதங்களையும் திருவாய்மலர்ந்து காமக்குரோதாதி குணங்களை நீக்கவேண்டியதே மானிடப்பிறவியின் முக்கிய பயனாகும், இவை நீங்குவதற்கே அந்தக்கரண சுத்தியும் விவேகாதி நான்குசாதனங்களும் வேண்டும். அதையடைந்த உத்தம சிஞ்ஞாசுகட்கு ஸ்ரீஸத்குருகடாக்ஷத்தால் மகாவாக்கிய உபதேசங்கிடைத்து சிரவணமனனநிதித்தியாசன பூர்வகமாய் பிராகிருதமாகிய ராகத்துவேஷாதி குணங்களினின்று விடுபட்டு ஜீவன் முக்தனாய்ப் பிரஹ்மநிர்வாணத்தை யடைகின்றான். ஆகவே காமக்குரோதமில்லாத நம்மிடத்தில் இவ்வியாக்கிரம் யாது செய்யும். நீயும் இவ்வுண்மையைப் பற்றி நடப்பாயென்று கிருபையுடனருளிச்செய்துமலையருவியில் ஸ்நானஞ்செய்து ஆச்ரமத்திற்கு யெழுந்தருளியிருந்தார்கள். அதன் இரண்டுதினத்தின் பின்னர் ரெங்கூன் ராமனுதரெட்டியார் யேஜண்டு (தஞ்சை) கோபாலசாமி பிள்ளை என்னும் வித்துவான் தமது ஆசாரியராகிய ஸ்ரீசுவாமிகளை தரிசிக்க ஆவல்கொண்டு திருக்குற்றாலம் வந்து ஸ்ரீசுவாமிகளை அழகியசெந்தமிழில் பாமா

லைகளால் அலங்கரித்தும் அவ்வமயம் சன்னிதானத்திருமுன்னற் குழுமியிருந்த அடியார்களையும் அப்பாமாலையில் சேர்த்து துதித்தும் வணங்கி ஸ்ரீகுருநாத னருள்பெற்று ரெங்கூன் சென்றார்.

அதன்பின் பழனி முதலிய க்ஷேத்திரங்களைத் தெரிசித்துக் கொண்டு ஸ்ரீதஞ்சைமாநகரத்திலெழுந்தருளி முன்னமே ஏற்படுத்திய சில உத்தம ஏற்பாடுகளை லோகோபகாரமாக விளங்கும் பொருட்டு தஞ்சாவூர் கோட்டை வடக்குராஜவீதியில் ஸ்ரீசங்கரவிலாச சாரதாமந்திர மென்னும் புஸ்தகசாலையும் யேற்படுத்தி அதில் பல புண்ணியவான்களாலும் உதவப்பட்ட அரியபெரிய கிரந்தங்களை பல பாஷைகளிலுள்ளதுகளையுஞ் சேகரித்துவைத்தும் தம்மால் மொழிபெயர்க்கப்பட்ட முன்சொன்ன சாஸ்திரங்களையும் மேற்படி மந்திரத்தின் மூலமாக அச்சியற்றி வெளியிடுவதற்கு ஸ்ரீசங்கரவிலாச சாரதாமந்திர அச்சுக்கூட இயந்திரசாலையும் அமைத்து மேற்படி மந்திரத்தில் திரிலோக பூஜ்யராகிய ஸ்ரீசங்கரபகவத்பாதாச்சாரியாள் திருவுருவப்படமும் தமது ஞானாசாரியாள்பரமாசாரியாள் திருவுருவப்படங்களும் அதிலிருந்து வேதாந்த பாடஞ் சொல்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் புத்தியும் வித்தையும் அபிவிருத்தியுமுண்டாகுமாறு யந்திரஸ்தாபனமுஞ்செய்து நித்தியபூஜை முதலிய விழாக்களும் நடக்கவேண்டிய முறைகளையும் அமைத்து இவைகளைச்சரியாய் நடத்திவரவும் மந்திரத்தை யபிவிருத்தி செய்யவும் காரியஸ்தர்(டிரஸ்டி)களை ஏற்படுத்தியும், தம்மை வந்தடைந்தோர்களுக்கு (வேண்டுவார் வேண்டுவனயீவான் கண்டாய்)என்னும் ஆன்றோர் வாக்கியத்துக்கிணங்க ஒவ்வொருநாளும் பல தேசங்களிலிருந்தும் வந்து சரணமடையும் பக்த குழாங்களுக்கெல்லாம் அவரவர்களுக்குவேண்டியவாறு சரியை, கிரியை, யோகம், ஞானம், பக்தி என்னும் உபாயங்களால் திருப்திசெய்துவந்தார்கள்.

ஸ்ரீசுவாமிகளின் பக்கத்திலே சதாஇருந்து பாகவத தருமத்தை கைக்கொண்டு அநேகபாஷைகளில் தேர்ச்சியுடையவராய் அரியபெரிய அவதார சரித்திரங்களையும் அடியார்களின் திவ்விய சரித்திரங்களையும்கேட்போர்களின் மனம் ஸ்ரீஜெகன்னாதரிடம் ஈடுபட்டு அசையாது நிற்கும்படி சங்கீததாளஸ்வரக்ஞானத்துடன் பாகவத முறைப்படி ஸ்ரீசன்னிதானத்தெரிசனைக்கு வந்துகொண்டிருக்கும் பக்த குழாங்களுக்கு அப்பக்தியின் இரசத்தை எடுத்தூட்டிவந்த ராம. வீராஸ்வாமி ராஜு என்னும் ஓர் பெரியாரிருந்தார். அவர் ஸ்ரீசுவாமிகளின் மைத்துனரும் சகோதரியின் பர்த்தாவும் ஆவர். இப் பாகவதமூர்த்தியும் ஸ்ரீசுவாமிகளின் ஞானாசிரியரிடமே ஒரே தினத்தில் ஆட்கொள்ளப்பட்டவராயினும் ஸ்ரீசுவாமிகளை தனது குருபீடமாகப்பாவித்து சதா தியானபூர்வக பூஜாவிதிகளையும் செய்து வருவார். " பக்திவலையிற்படுவோன்காணம்மானை " என்பதைத்

தெளிவுறக்காட்டும் அப்பெரியாரும் சித்தார்த்தி௵ கார்த்திகைமீ பாகதியடைந்தனர்.

அதன்பின்னரும் ஸ்ரீஸ்வாமிகள் உத்தரதேசயாத்திரை செய்து சந்நியாசாச்சிரமமாகிய துறவு பூண்டு யாதனின் யாதனி னீங்கியா னோதலதனி னதனி னிலன் என்னும் வாக்கியத்திற்கே லக்ஷியம் என்று உத்தர தெக்ஷண தேசத்துள்ள உத்தமர்களாலேயே கொண்டாடும்படி துறவுக்குரிய சகலகுணசிரேஷ்டராய், பரமசாந்தசொரூபியாய், கருணாநிதியாய், நித்திய மங்களவிக்கிரகமாய், மௌனமூர்த்தியாய், சகஜநிஷ்டாபரராய் ஹரித்துவாரம் என்னும் ஸ்தலத்தில் யெழுந்தருளியிருந்தார்கள். அப்போது அங்குள்ள கன்கல் பெரிய மடம் மண்டலீகஸ்வாமிகள் நமது சுவாமிகளை தெரிசித்து வித்தையும் வித்தையாலடையும் பயனையுமுடைய களஞ்சியமே வித்வான்களால் அடையக்கூடிய நிஜாநந்தமெதுவோ அந்தப்பிரஹ்மாநந்த சொரூபமாயிருப்பதால் ஸ்ரீபிரஹ்மாநந்தஸ்வாமிகள் இவர்களேஎன அங்குள்ள முமுக்ஷுக்கள் முதலியோருக்கும் கட்டளையிட்டு ஸ்ரீசுவாமிகளை அவ்விடமே(கன்கலில்)யெழுந்தருளியிருக்கும்படி பிரார்த்திக்க மற்ற விடங்களிலுள்ள உத்தமர்களின் புண்ணியவசத்தால் அம்மண்டலீகஸ்வாமிகளுக்கு சமாதானஞ் சொல்லிவிட்டுபத்திரிநாராயணம் பத்திரிகேதாரம் ஸ்ரீபிரஹ்மகபாலம்முதலிய ஹிமோத்கிரி மேலே 360 மைல் தூரமுள்ள ஸ்தலங்களைத்தெரிசித்து அந்த ஸ்தலங்களையும் பவுத்திரமாக்கியும் ஸ்ரீவியாசபகவானை அங்கு தெரிசித்து உசாவியாக மகிழ்ந்தும் மீண்டும் தஞ்சைமாநகரம் வந்தெழுந்தருளியிருந்தார்கள்.

ஸ்ரீமகாசன்னிதானத்தின் அடியவர் குழாங்களில் அந்தரங்கபக்தியாய் திரிகரணங்களுடன் திரவியத்தையும் அர்ப்பணஞ்செய்து ஸ்ரீமகாசன்னிதானத்தின் பாதாரவிந்தங்களையே மெய்ப்பொருளாகக்கருதியும் மற்றஎப்பொருளாயினும் இல்லையென்னுந்துணிபுகொண்ட தீவிர பக்தியோடுகூடிய ஓர் பெரியாரிருந்தார். இவர் தமது உத்தியோககாலத்திலேயே ஸ்ரீமகாசன்னிதானத்தின் திருப்பாதாரவிந்தத்தில் அடிமை பூண்டவர். இவர் உபகாரச்சம்பளம் (பென்ஷன்) பெற்றதுமுதல் ஸ்ரீமகாசன்னிதானத்தின் பாதசேவையும் பணிவிடையுமே தனக்கு பின்உத்தியோகமாய் கைக்கொண்டு ஸ்ரீமகாசன்னிதானத்தின் பின்னரே பல க்ஷேத்திரங்களிலும் வசித்து வந்தார். பின்னர் ஸ்ரீமகாசன்னிதானத்தின் உத்தரவின்பேரில் இரண்டு முறை பூபிரதக்ஷணமும் பத்திரிநாராயணம் பத்திரிகேதாரம் ஹரித்துவார் முதலிய க்ஷேத்திரவாசமும் செய்துவந்து ஸ்ரீமகாசன்னிதானத்தின் திவ்விய பாதபத்மங்களில் அடியற்றமரம்போல்விழுந்து எனது அப்பனே! அடியேனை ஆட்கொள்ளவேண்டுமெனப்பிரார்த்திக்க ஸ்ரீமகாசன்னிதானம் அஞ்சேலென அபயஸ்தம்கொடுத்து ஸ்ரீ

பி. ராமாநந்தஸ்வாமி என்னும் நாமகரணமும் கொடுத்து நான்காவ தாச்சிரமமாகிய துறவு பூண்டு தம்மால் ஏற்படுத்தி நிலைபெறச்செய்த ஸ்ரீசங்கரவிலாசசாரதாமந்திரத்தின் காரியதரிசி என்னும் பணிவிடையை எமது பணிவிடையாக சதா செய்துகொண்டிருப்பாயாக என்று கட்டளையிட்டார்கள். அன்னவர் அப்பணிவிடையை சிரமேல்வகித்து நடத்துபவர் ஆனார். பின்னர் ஸ்ரீமகாசன்னிதானம் தன்னைவந்தடைந்தோர்க்கெல்லாம் தன்னையே உணருமாறு சமிக்கையால் உபதேசித்து வருவதைக்கேள்வியுற்று அநேகவிடங்களிலிருந்தும் பக்தசிகாமணிகள் இடைவிடாது சதாவந்து தெரிசித்துப்போவார்கள். மரியாதை, மானம், பூஜிதை முதலியவற்றின் பொருட்டல்லாத சந்நியாசமெதுவோ அதனையே பூண்டுபிரஹ்மாநந்தரும் பரமசுகத்தைத்தருபவரும், ஞானவடிவினரும், துவந்துவாதீதரும், ஆகாயத்தைப்போன்றவரும், தத்துவமஸி முதலியவற்றின் இலக்ஷியமும் ஏகமும் நித்தியமும் விமலமும் அசலமும் சகலபுத்திகளின் சாக்ஷிவடிவினரும், இதயதாமரையில் வீற்றிருக்கும் திவ்விய வடிவினரும் ஆநந்தசொரூபரும் ஆநந்தத்தைச்செய்பவரும் விரும்பியவரத்தைக்கொடுப்பவரும், பிரசன்னரும் ஞானசொரூபரும், யோகீந்திரரும், துதிக்கப்படுபவரும், பவரோகவைத்தியருமாகிய எமது குருமூர்த்திகள் இவ்வாறு யெழுந்தருளியிருந்தார்கள்.

இங்கு அதிகமாய் எழுதுவதால் என்ன? ஸ்ரீமகாசன்னிதானம் சேதுமுதல் ஹிமாசல பரியந்தமான சர்வதேசங்களிலும் லோகோபகாரார்த்தமாக சஞ்சரித்து ஆங்காங்குள்ள பக்தர்களுக்கும் நித்தியாநந்தத்தையுபதேசஞ்செய்து உத்தமமாகிய பக்தி முதலியவைகளை நிலைநிறுத்தி மூன்றுதரம் பூமிவலம் (பூபிரதக்ஷணம்) வந்து சைவ வேதாந்தம் என்றும் நிலைபெற்றோங்க தாம்செய்த சாஸ்திரங்கள் யாவும் என்றும் இத்தமிழ் நாட்டவர்க்கும் மற்றவர்க்கும் கற்கவும் கேட்கவும் பயன்படுமாறு ஸ்ரீசங்கரவிலாசசாரதாமந்திரம் யென்னும் உத்தமஸ்தானத்தை உதவியும், உலகையெல்லாம் உய்வித்து பின்னர் கலி-ஐயாயிரத்து இருபத்திமூன்று, கொல்லம் 1097ஆம் துன்மதி-வருஷம் புரட்டாசி-மீ முதல் தேதி வெள்ளிக்கிழமை பௌர்ணமையன்று ஸ்ரீசாமிகளின் இளைய சகோதரர் முதலான தமது கருணைக்குரிய மெய்யன்புற்ற பலர் சூழ்ந்திருப்ப திருச்சிராப்பள்ளி ஜில்லா ரெட்டியார்துறையூருக் கடுத்த சிக்கத்தம்பூர் என்னும் திவ்விய ஸ்தலத்தில் முன்செய்த தவப்பயனுடைய பக்தசிகாமணியாகிய விருத்தாசல ரெட்டியாரவர்கள் கிரகத்தில் பத்மாசனமிட்டு உட்கார்ந்து மகாபுண்ணியமும் தபசும் ஞானைசுவரியமும் நிறைந்த திருவவதாரத்திருமேனியினின்றும் பிரஹ்மசொரூபத்தில் ஐக்யமடைந்தார்கள். ஸ்ரீமகாசன்னிதானம் சமாதி வீற்றிருக்கும் அந்த ஸ்தானத்தில் ஸ்ரீரெட்டியாரவர்களால் ஆலயம் யேற்பட்டிருக்கிறது.

இன்னும் பெரிய ஆலயமாகவே பல கனதனவான்களால் யேற்படும். ஸ்ரீசுவாமிகள் சமாது கொண்டிருக்கும் ஸ்தானத்தில் ஸ்ரீகாசிலிங்கப்பிரதிஷ்டையும் கும்பாபிஷேகமும் சிறப்பாய் நடந்தேறியும் மண்டலாபிஷேகம் வருஷாபிஷேகம் முதலியதுகளும் நடைபெற்றதுடன் நித்தியநைமித்திய பூஜைகளும்கிரமமாய் நடந்து வருகின்றன.மகாசன்னிதானம் சமாதி கொண்டிருக்கும் இடத்தில் இப்பொழுதும் உள்ளன்போடு தவம் செய்வார்க்கு பரமாநந்தம் அளித்துப்பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

"திருநெல்வேலிஜில்லா திருநெல்வேலித்தாலுகா தச்சநல்லூர் ரயிட்டர் மகா-ள-ள -ஸ்ரீ பாலு நாயுடு அவர்களின் கனிஷ்டபுத்திரரும்சிந்துபூந்துறை வாசரும், சீர்காழியில் போலீஸ் இன்ஸ்பெக்டராகவிருந்தவரும், திருச்செந்தூரில் நியாயவாதியாகவிருந்தவரும்,கடம்பூர்ஜமீன் கோர்ட்டாப் வார்ட்ஸ் மானேஜராகவிருந்தவரும், தற்காலம் இளவரசனேந்தல் 1-வது பாகம் ஜமீன்கோர்ட்டாப்வார்ட்ஸ் மானேஜராகவிருப்பவரும் நெட்டூர்ப்புராணம், (திருச்செந்தூர் சிலேடை வெண்பா, கந்தர்வெண்பா அந்தாதி, கோபுரச்சிரப்புப்பதிகம்), வானமாமலைக்கலம்பகம், ருத்ரபுரம் கலியாணியம்மனந்தாதி, திருக்குறுங்குடி திருமலைநம்பியந்தாதி, (சிந்துபூந்துறை தக்ஷிணாமூர்த்தியந்தாதி-பதிகம்-சந்தவிருத்தப்பதிகம்—வண்ணம்—கேமன்முனிவரந்தாதி-பழனியாண்டவர்பதிகம்-ஸ்ரீவேதநாயக சுவாமி நான்மணிமாலை)-நெல்லைத்திருப்பணி ஆறுமுகநயினார் பதிகம்-(தச்சநல்லூர் வரதராஜப்பெருமாளந்தாதி, நெல்லையப்பர் அலங்காரபஞ்சகம்,(சித்தர் ஐம்மணிமாலை, தேவாரம், திருவெழுக்கூற்றிருக்கை),அட்டமத்துச் சனீஸ்வரபகவான் தோத்திரம், நசரேயன் திருவவதார நாடகம் முதலிய நூல்களியற்றியவரும் தஞ்சை ஸ்ரீ சங்கரவிலாச சாரதாமந்திர முதலாவதாண்டுற்சவத்திற்கு வாழ்த்துப்பாக்களியற்றியவரும், தஞ்சை தெற்கலங்கம் சகோதரர்களான புருஷோத்தமநாயுடு அவர்கள், இராமகிருஷ்ணநாயுடு அவர்கள், பென்சன்போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சௌரிராஜநாயுடு அவர்கள், இவர்களுக்கு உறவினரும் மேற்குறித்த வீராசாமிராஜு பாகவதரவர்களால் சிந்துபூந்துறையிற்றனது கிரகப்பிரவேசவிழாவில் சீதாகலியாணச்சரித்திரம் நடத்தியவரும் சென்னை சைவ வித்திசானுபாலன அச்சியந்திரசாலை தலைவரும் ஆறுமுகநாவலரவர்களது சீடருமான ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதரவர்களால் கவிச்சக்கிரவர்த்தியெனப் பெயர் பெற்றவரும் சிந்துபூந்துறை தக்ஷிணாமூர்த்திலாட்ஜ் (Lodge) என்ற பிர்ம்மஞானசபை காரியதரிசியும் அடியார்களின் திருப்பாததூளியைச் சிரமேற்றரிப்பவரும், பென்சன் போலீஸ் இன்ஸ்பெக்டருமான மகா-ள-ள-ஸ்ரீ B. B. நாராயணசுவாமி நாயுடு அவர்கள் என்ற இந்நூலாசிரியர் ஸ்ரீ சுவாமிகள் இருமுறை திருநெல்வேலிக்குச் சென்றி

ருந்தகாலத்தில்ஸ்ரீசுவாகளைத் தெரிசித்துத் திருவருளைபெற்றவர். இவர் ஸ்ரீசுவாமிகளின் பேரிலுள்ள அன்பினால் இந்நான்மணிமாலையைப் பெரும்பாலுஞ்சித்திரக்கவிகளாலமைத்தியற்றியுள்ளார். இவரும் இவருடையபரம்பரையும் இன்புற நீடூழி வாழுவண்ணம் ஸ்ரீசுவாமிகள் அருள்புரிவார்களாக."

---

## ஸ்ரீபிரஹ்மாநந்தஸ்வாமிகளின் ஜாதகம்.

கலி-4968 வரு கொல்லம்1042 வரு அக்ஷய வரு பங்குனி மாசம் இரண்டாந் தேதி குருவாரம் நவமியினந்தம் திருவாதிரை நாலாம்பாதம் நாழிகை 41-ல் ஜெனனம், ஜென்மலக்கினம் விருச்சிகம். ஆதியில் ராகுதிசையில் இருப்பு மாதம் ஐந்து நாள் (உரு) இருபத்தைந்து. இது கொல்லம் 1043 வரு ஆவணிமீ 27உ வரை. மேல் வியாழதிசை வரு கசு.

| | | | |
|---|---|---|---|
| கு-பு -கே | | | சந் -செ |
| வி | கிரகநிலை | | |
| சு | | | |
| | ல | சனி | ரா |

ஆதித்தன் — நட்பு.
சந்திரன் — பகை.
செவ்வாய் — நட்பு.
புதன் நீசபங்கம் யதிராஜயோகம்.
வியாழன் — நட்பு.
சுக்கிரன் — பகை.
சனி — உச்சம்.
ராகு — பகை.
கேது — நட்பு.

---

அன்பத்தியாருண்டாக வருட்டிருமேனி சாத்தி
அன்பொடுவணங்குவார்களகத்திருளகற்றித்தன்பால்
அன்பிலாவடியனேற்கு மறிவுவந்தளித்தவையன்
அன்பினாலடிமை கொண்டானதற்குமோர்கைமாறுண்டோ.

துக்கமில் தஞ்சைவாழுஞ் சுவாமியாம் பிரஹ்மாநந்த
மிக்கசீரியற் கையாகப் படைத்தவன் மேலாங்காதை
தக்கவருரைக்க வேண்டுந் தகைமையில்லாத யானுஞ்
சிக்கெனவுரைத்தே னஃதைச் செவ்விதாய்த் தெரிவர்மேலோர்.

ஸ்ரீபிரஹ்மாநந்தஸ்வாமிகளின் திவ்வியசரித்திரம்,
முற்றிற்று.

ஸ்ரீஸத்குருபிரஹ்மாநந்தஸ்வாமிநே நம:

சு. பாக்கியம்பிள்ளை,
மானேஜிங் டிரஸ்டி,
ஸ்ரீசங்கரவிலாச சாரதாமந்திரம், தஞ்சை.

ஸ்ரீ

தஞ்சைப் பிரமானந்த சுவாமிகள்பேரில்

# நான்மணி மாலை.

## விநாயகர் வணக்கம்.

### வெண்பா.

தஞ்சை நகராசான் சால்பிரமா னந்தன்மேல்
மஞ்சுள நான்மணி மாலைசொல—எஞ்சாநல்
வந்தனைக்குண் ணோர்ந்துசெல்வ மாதிவளஞ் சாலால்கு
கந்தனுக்கு முன்புதித்தோன் காப்பு.

## நூல்.

## சிவலிங்கபந்தம்.

### வெண்பா.

சீர்மேவுந் தேந்துணர்த்தா அு ணோர்ந்துயர்ந்தான் சேயென்வாய்
நேர்திகழ்புத் தார்வமூர் நீர்கவர்ந்தூஉங் *கார்த்தெண்
ணவலிங்க ப்†ரமானந் தா‡னவன் றஞ்சைச்
சிவலிங்க மூர்த்தியெந் தே. (க)

## சிவலிங்க பந்தம்.

### கலித்துறை.

தேசிக மோனவே கப்பிர மானந்த சீருயர்ந்த
வாசி மிகுத்தோர்ந் சருணிலே மேவற்கிம் மாநிலக்க
*ஞசங்கை யோங்குயி ரோயுமுன் பாலிஅந்தஞ்சையிலே
வாசவர் வாழ்த்து சிவலிங்க மாகி வருகுருவே. (உ)

---

* ஆர்த்து † ர விட்டிசைத்து நேரசையாயினவாறு, ‡ அன்னவம் சமுத்திரம்.

* ஆசங்கை.

### விருத்தம்—சந்தம்.

குருவழி யன்றி நாடிடுங் *தாரி குறித்துட னுய்த்துணர் †சித்தூர்
கோதறு பிரமா னந்தகை வலியங் கூடியு ளாறுதன் முறையோ
அருவழி தன்றி யாசைகொண் டோடி யலுக்‡ துடனைத்தச்சங் தொட்டே
ராசொடு களிமா னந்தகை வலியங் $காயி லெனுமொரு ‖மதியா
வொருவழியின்று பேசுவன் ¶கோடி ‖யுரத்தையரிச்சித்தன் பிற்றே
ரோமம்வி டணிதே ருந்துமாமணிவிண் டோலிடுமேருறவுரவோர்
தெருவழியொன்றி யாகமங் கூறு சிறப்பமர் தஞ்சபிலுற்றோர்
தேசுறு பிரமா னந்தமா தவனின் சேவடி சேருதல் செயலே(௩)

## இரண்டு எதுகை வருவது.

### அகவல்.

செயமிகக் கொண்டு சிறப்புற வரனும்
இயமுற வுமையு மெந்தை கந்தனுங்
கனிவுற வாண்ட கன்னி நாட்டிற்குப்
புனைதகு திலகமாப் பொலிவுறு முகவையில்
அலையிற் றுரும்பென வாற்றிய வினையினால்
உலகத் தலமரு முபிரெலா முய்ய
ஆயிரத்தா றேழாண் டட்சய வருடம்
பாய்மீன் கதிர்புகு பங்குனி மாதம்
அரனுற் பவித்த வாதிரை நாளில்
விருச்சிக லக்கின வேளையுற் பவித்து
உண்டுநல் லுணவென வுலகுரை சோழ
மண்டலந் தன்னில் மாநிலத் தியாருந்
தஞ்சமென் றெண்ணத் தகுதகை நகராந்
தஞ்சையி லுறைந்து சாகரத் தப்புறத்
துளவம ரிக்காக் கண்டத் தொருங்கி
யளவுட னமைமதப் பாரா ளவையில்
மெய்த்தக வேத்தும் விளக்க மெய்திய
அத்து விதத்தி னார்கலி வரம்பு கண்

---

*தாரி = வழி, †சித்து = அறிவு, ‡உடல் + நைத்து, $ஆயில் = நீக்கில் + என் = என்னபிரயோஜனம், ‖மதியா = புத்தியாக, ¶கோடி = கொள்தி, ‖உரத்து + ஐயர் = அந்தணர் + இச்சித்து அன்பின் + தேர் + தேர்ந்துசெய்கிற + ஓமம் = யாகத்தில் + விடு + அணிதேர், ஓர் = ஒப்பற்ற.

டாரிய பாடை யடங்கலுங் கற்றுச்
சீரிதின் மன்ற தெளிந்தெடுத் தெழிலார்
பஞ்ச தசிவிருத் திப்பிர பாகரம்
பொன்செய் சிவஞான போத மழகார்
யோகப்ர தாப மொண்பால போதம்
யோகப்ர தீபிகை யொன்று மடமையீர்
அடயோ கப்பிர தீபிகை ஞானச்
சுடர்படர் நந்தி கேசுர காசிகை
திருமலி ஞானவா சிட்ட வசனம்
சுருதிஷட் லிங்க சங்கிரகப் பெயர்நூல்
நிந்தையில் கைவல் லியவுப நிடதம்
சுந்தர வமிர்தவிந் தூப நிடதம்
நியம சுகரக சியயுப நிடதம்
சுயவிச யஸ்கந் தோப நிடதம்
பஞ்சா க்ஷரவிளக் கம்பகர் பாசமீர்
மஞ்சுள ராம மந்திரார்த்தம்
கணேச சோடச நாமஸ் துவநூல்
மணேச சகத்குரு சங்கராச் சாரியம்
பிர்ஹ்ம விதாசீர் வாத பத்ததி
தருக்க கௌமுதி தத்துவ மசிமகா
வாக்கிய வுபதே சஞ்சத் குருஸ்துவம்
மாக்க ளுஜ்ஜீவிக்க வகுத்த
விருத்திரத் திருவலி விவேகசிந் தாமணி
தருக்க சூத்திரமப ரோக்ஷா னுபூதி
ஆத்ம போதம் அறை தத்வ போதம்
பாத்து பூத பஞ்சீ கரணநூல்
எஞ்சலி லுத்தர கீதைகுரு கீதை
விஞ்சு ராமகீதை தேவி கீதை
சங்கராச் சாரியர் சரித்திரச் சுருக்கம்
சங்கரவித்தியா ரண்ணியாஷ் டோத்தரம்
சங்கர நீலகண் டார்யசம் வாதம்
பொங்கிய மாண்பின் பிர்ம்மநா மாவலி
குருவஷ் டோத்தர சதநா மாவலி
பொருவரு நாரத பக்தி சூத்திரம்
*பட்ட விசிட்ட பகவற் கீதை
அஷ்டத்தியாகியென் பாணினீயம்
மூவா ஜீவன் முத்தி விவேகம்

*பட்டம் = விளக்கம்.

ஆவா வைஷ்ணவ வஷ்டா க்ஷரார்த்தம்
பூரண மாகுரு புஜங்க தோத்திரம்
காரண பிரணவ கணேச கீதை
அவதூத கீதை அவதூத சம்வாதம்
சுவப்பிரச் நோத்தர ரத்தின மாலிகை
பூர்வமீ மாம்சை யர்த்தசங் கிரகம்
ஆர்வ மிகுயதீந் திரமத தீபிகை
கணேஸ்வ ராஷ்டகம் சார தாஷ்டகம்
உணேச அஷ்டா வக்கிர கீதை
பாதஞ் சலிய யோக சூத்திரம்
மேதகு சீர்சால் சர்வஞா ணேத்தரம்
சுவாத்ம நிரூபணம் ஆத்மாணுத்தம
விவேகம் சதாசாரம் யோகதா ராவலி
சருவவே தாந்த சார சங்கிரகம்
மருவிய புங்கவ சாங்கிய சூத்திரம்
சுகமிக ரமிக்க மேற்சொன்னவையோடு
அகவிய மதியின் அனுமான் ஜோசியம்
அட்டாங்க யோகம் அஜீர்ணபாஸ் கரமிச்
சிட்டாங் கம்பெறு ஸ்ரீசூக் திகளொடு
விசார சாகரம் விசாரசந்த் ரோதயம்
அசாத்திய மானவிவ் வரியநூ லனேகம்
அமிழ்தென யாரு மார்ந்து நிலவத்
தமிழிற் றந்து தஞ்சைமா நகரில்
சங்கர விலாச சாரதா மந்திரம்
இங்கித மாக வெண்ணுற வமைத்து
நல்லோமுக் கமைந்த ஞான முத்தி
புல்லுதற் காறெனப் போதித் தமைவரக்
கண்ணினிற் கண்டு களிக்குமா வேண்டி
நண்பினிற் றூனே நடந்து காட்டி
இல்லற மாதி யியம்புமாச் சிரமம்
புல்லரி லின்றிப் புலனுற வாற்றிச்
செந்தின்மா நகரிற் றிருநாள் விசாகத்து
அந்துழாய் மௌலி யரங்கவே காதசி
தில்லைமா நகரிற் சிவனு திரைநாள்
கொல்லையிற் செருந்திசேர் குடந்தை மகாமகம்
இவைக டலைப்படு மெல்லையில் பக்த
வவைக ளுலப்பில வையனின் பேரவை
விண்மீ னினத்தின் மேலும்போ யெட்டி

எண்ணில வாக வியையப் பெற்று
வையக முழுதும் வலம்வரப் பெற்றுள்
ளையமின் மோன மடைந்திமா சலத்தின்
அருகர்த் தென்பால் வரநதி வந்திழி
அரித்துவா ரத்தலத் தன்புடன் வசித்து

## அருபந்தம்.

ச-வது பக்கம்-கக-வது வரிமுதல் கக0-வரை இதைச்சேர்த்தும் பின் தொடர்ச்சியாய் வாசிக்கவேண்டியது.

"தந்தை தாயர் தகவலின்றி
சிந்தை மகிழ்ந்து திருப்புடை மருதூர்
நகர்மறைந் தியோகம் நடாத்து நாளில்
புகர்முகக் கரியுரி பொலிமெய்ப் புத்தேள்
எரிபசி நீக்க வின்சுவை பழுதைப்
பரிவுட னளிக்கும் பரிசு பெற்று
பவமறு ஞானப் பண்பு பேணிய
வவனிபே ணறிஞ ரறியா மூலச்
சிற்று ரென்னுஞ் சித்திர நதியுதி
குற்று லத்திற் குலவரிப் புலியையோ
ரடிமையி னடுக்க மக்கண னீங்க
நொடியினில் விலக்கிய நோன்மை வாய்ந்து."

விண்ணினு நின்சீர் மிகுமணம் வீசுமே. (ச)

## இரதபந்தம்—11 தட்டு.

### வெண்பா.

வீசுசொற்பேண் *கம்மியந்தோய்ச்சால்புகல்வி மெய்ச்செவ்வி
தேசுயர்வேர் தத்துவநேர் தெய்வமிந்நா ளாசீர்
திரமோன மேவித் திருமானேய் தீரன்
பிரமானந் தச்சாமி பேசு. (ரு)

*கம் + இயம் = அல்லது கம்மியம் = பேறு.

ஆவா வைஷ்ணவ வஷ்டா க்ஷரார்த்தம்
பூரண மாகுரு புஜங்க தோத்திரம்
காரண பிரணவ கணேச கீதை
அவதூத கீதை அவதூத சம்வாதம்
சுவப்பிரச் னோத்தர ரத்தின மாலிகை

இங்கித மாக வெண்ணுற வமைத்து
நல்லொழுக் கமைந்த ஞான முத்தி
புல்லுதற் காறெனப் போதித் தமைவரக்
கண்ணினிற் கண்டு களிக்குமா வேண்டி
நண்பினிற் றானே நடந்து காட்டி
இல்லற மாதி யியம்புமாச் சிரமம்
புல்லரி வின்றிப் புலனுற வாற்றிச்
செந்தின்மா நகரிற் றிருநாள் விசாகத்து
அந்துழாய் மௌலி யரங்கவே காதசி
தில்லைமா நகரிற் சிவனா திரைநாள்
கொல்லையிற் செருந்திசேர் குடந்தை மகாமகம்
இவைக டலைப்படு மெல்லையில் பக்த
வவைக ளுலப்பில வையணின் பேரவை
விண்மீ னினத்தின் மேலும்போ யெட்டி

எண்ணில வாக விஜயப் பெற்று
வையக முழுதும் வலம்வரப் பெற்றுள்
ஐயமின் மோன மடைந்திமா சலத்தின்
அருகர்த் தென்பால் வரநதி வந்திழி
அரித்துவா ரத்தலத் தன்புடன் வசித்து
மண்ணின் மயக்கை வானிற் கரிதெனக்
கண்ணினிற் காணக் காட்டி நின்று
மிக்கத் தம்பூர் வியத்தகு செல்வர்வாழ்
சிக்கத் தம்பூ ரன்பிற் சேர்ந்து
மிருத்தாதி சனன மேன்மே வாமை
விருத்தா சலப்பூ வேந்தாச் சிரமவாய்
ஆயிரத்துத் தொண்ணூற் றேழா மாண்டு
ஞாயிறு கன்னியி னகர்முதற் றேதி
பௌரணை வெள்ளி பூரட் டாதி
வெளவு கடிகை மாலை முப்பதில்
வியனுற மேலெண் விதேககை வல்ய
நயநிலை யுற்றதோர் நற்றவ னாகிய
குப்பு சாமி மகராஜ் குறியுடைச்
செப்புறு பிரமா னந்த மாதவப்
பேரது சிறப்பப் பெற்றனிர் பெரியோய்
யாரை நின்சீ ரறைய வல்லுநர்
வனந்துன் னாவி ராயிர மன்னிய
வனந்த னானு மாகா வன்றே
மண்ணி னன்றி மாண்பார்
விண்ணினு நின்சீர் மிகுமணம் வீசுமே. (௪)

---

## இரதபந்தம் —11 தட்டு.

### வெண்பா.

வீசுசொற்பேண் *கம்மியந்தோய்ச்சால்புகல்வி மெய்ச்செல்வி
தேசுயர்வேர் தத்துவநேர் தெய்வமிந்நா ளாசீர்
திரமோன மேவித் திருமானேய் தீரன்
பிரமானந் தச்சாமி பேசு. (௫)

---

*கம் + இயம் = அல்லது கம்மியம் = பேறு.

## ஆறாரைச்சக்கரபந்தம்.

### கலித்துறை.

பேசவொண் ணுவுயர் *வொப்பிகா னன்னநற் பெட்புடனுள்
†ளேசற வீர்ந்து நிலைபர காந்தியாய்ந் தீங்தெண்மன
வாசவன் றோர்ந்திவண் மாகாதல் கொண்டு மகிழமுன்பே
பேசுமுள் ளேய்ந்துவாய்ந் தாள்பிர மானந்தப் போரசே. (௬)

குறட்டில் = "பிரமானந்தகா" என்று வருதல் காண்க.

### விருத்தம் — சந்தம்.

அண்ணலெனுந் தஞ்சையமர் பிரமா னந்த
னடியவரி னடித்துகளை முடிநேர் வாரேல்
*விண்ணவரும் பங்கயனும் விடைமே லுந்து
விமல †னுமை நிறத்தவனு முதலா வானோர்
பண்ணவருஞ் சங்கையறு பணிமே லொன்றிப்
பரிவினுட னிசைத்தவர்தம் வசமா வாரேல்
எண்ணியுணர்ந் தங்கவனி னுலவா நன்றை
எவராறைவ ‡ரகிக்கரசு மெளிதோ தானே. (௭)

### நான்கு எதுகை வரவிபற்றியிருக்கிறது.

### அகவல்.

எழில்கொள் மாதர்பால் கழிபெருங் காதலின்
வழிதரு மயலி னழிவுறு நெஞ்சே
அன்னவர் தம்மா லுன்னுறு புகழிழந்
தின்னலுற் றுழன்றவ ரின்னிலத் தனேகர்
ஆதலா லவர்பாற் காதலை யொழித்து

---

*ஒப்பு + இகு + ஆன் = பசு + அன்ன, † எசறவு = துக்கம்.
*விண் + நவர் = நவக்கிரகம், † மைநிறத்தவன் = விஷ்ணு ‡ அகிக்கரசு = ஆதிசேடன்.

நீதமாம் வழியிற் போதலே கருமம்
ஒற்றை மருப்புழை நற்றவ முனியுங்
கற்றைச் சடைமதிப் பெற்றவா கனனும்
மருமலர்க் கிழவனுங் கருவிளை வரிக்கட்
டிருவமர் மார்பனுங் கருமுகி லூர்தியும்
விண்ணொளிர் மதியு மெண்ணுறு பராசனும்
கண்மூ நான்குடைச் சண்முகச் செம்மலும்
உரிமை யிழந்து மருமை குறைந்தும்
பெருமை குலைந்துந் தெருமந் தனரேல்
எவ்வித மென்ன லவ்வித மொழுக
வொவ்வு மெனவே செவ்வையி னவில்வையேல்
எத்தனை மேலோ ரித்தரை மீதில்
உத்தம ராகி முத்திவாய்ப் பெய்துளார்
கேண்மதி நீயே மாணமர் நூல்வழிப்
பேணியொழுகிப் பூணுதி பொருளில்
ஐம்புலக் குறும்பர் மொய்ம்புசெற் றவருஞ்
செம்பொரு ளுணர்ச்சி நம்பிலாக் கயவருந்
தன்னிலை பெரிதெனப் பன்னிமெய் யுணராப்
புன்னிலைச் சமயிகள் முன்னிலைச் செறியாது
அந்தரங் கத்தே சந்ததங் குசைநுதி
யுந்திய தெனவே சிந்தனை யுய்க்குதி
சாலவே யகன்ற வோலவா ரிதிசூழ்
ஞாலமேல் மாதரார் மாலினை யுரைக்கின்
பூசிய தைல வாசனை யின்றேல்
ஊசிய கூந்தலைப் பாசடை யென்றும்
உள்ளொழு மூத்தைப் பொள்ளுறு வாயை
விள்ளுறு செம்பூ முள்ளில வென்றும்
சாடிய பீளை யாடிய கண்களைப்
பீடிள மானென் றூடிப் புகழ்ந்தும்
சிலந்திபோன் மார்புத் தலங்கவர் துணைமுலை
நலங்கொளிங் குலிகத் திலங்குசெப் பென்றும்
மாலுதி மலக்குதம் பாலது காலுநீர்த்
தோலதும் பீறல் போல்வது நிதம்பம்
மொய்மாந் தளிரெனு மெய்மேற் பைம்மறி
யம்மா திரிகாண் பொய்மேல் வெளிப்படும்
மலமு மூத்திர சலமுங் கிருமியும்
புலவு நரம்பெலும் புலவுதுர்க் கந்தமே
மண்ணின் மேன்மன மொண்ணுதல் செய்ய

வொண்ணு மோவத னுண்மையைக் கேண்மோ
பண்ணையாண் டொழிந்தவர் நுண்ணிய மணலினும்
எண்ணி லதிகரே விண்ணிடு வில்லும்
கானற் றேரும் வான மையும்
மா னு மவர்நிலை தா னு மென்றே
உதவிய வறிவா லிதனைநீ நன்கு
சதமென வெண்ணேல் சததமு மாதி  ருo
அந்தமி லின்ப சிந்துவில் மூழ்குதி
*கந்தொரு வழியை முந்துற வுரைப்பனுன்
முக்கனித் தேனு மிக்குவின் சாறும்
பக்கம் நின்று தொக்கபூந் தருவின்
உக்க தேறலு மொக்க வோடி
நெற்கஞல் கழனி புக்கு வளஞ்செயும்
சொக்கத் தங்கம் பக்க மொளியெறி
சிக்கத் தம்பூர்ப் பக்கண மெய்தி
உவகிட தத்தத் துவப்பொரு டேர்ந்த
நவமுறு சுவானு பவச்சிவ ஞானி  சாo
சிந்தை யென்றுமோ னந்தனில் வைத்தமர்
எந்தை பிரமா னந்த முனிவன்
நறைமல ரடியை நிறைதகத் தொழுது
பொறையினி லன்பினிற் பரசுக பெரிதே.  (அ)

---

## நடுவெழுத்தலங்காரம்.

### வெண்பா.

†தேனுகை செல்விசெந் தீக்கால் பதர்மின்வே
ருனபேர் நட்டெழுத்தி னுக்கமெய்தி—யேனவற்றை
ஏய்ந்தடைந்தீர்ந் தேகவுற வேலவொன்ற நேர்குருசொற்
சார்ந்தபிர மானந்தன் ருன்.  (க)

---

* கந்து = பற்றுக்கோடு, † சததம் = எப்போதும்.

† தேனு = கபிலை = கலை = ஏய்ந்து, கை = காம் = கம் = அடைந்து, செல்வி = கோமாள் = கோள் = ஈர்ந்து, செந்தீ = கனலி = கலி = ஏக, கால் = வந்து = வது = உற, பதர் = பதடி = படி (பூமி) = ஏல, மின் = சம்பை = சபை = ஒன்ற.

நடுவெழுத்துக்கள் = பிரமானந்தம்.

## கலித்துறை.

ஆ*னந்தந் தாதி யமலன் சிருட்டியென் ருய்ந்திருந்தும்
ஆ†னந்தந் தாதி லகுமகஞ் செய்தென் னருமறையீர்
ஆ‡னந்தந் தாதி வியபிர மானந்த வையனு¶றை
ஆ§னந்தந் தாதி யெனவேத்திப் பேற்றை யடைகுதிரே. (௧௦)

## விருத்தம்—சந்தம்.

அடைநடு*வி றுதியில தாமந்த நுனியே
அகவலுறு நாலுமறை மீதொன்று தொனியே
விடையமதி லாசையறு வார்கொஞ்சு கனியே
விரவலர்கள் பீதியுற வேயுந்†த சனியே
நொடிகலைக ளுள்வருட மாகின்ற ‡நனியே
நுவலுமறி வோதுவித மாகின்ற தனியே
நடைகொள்பிர போதபிர மானந்த முனியே
நணுகிநனி யீதிபர மானந்த மினியே. (௧௧)

"ண"கர வின வெதுகை வரவியற்றியிருக்கிறது.

## அகவல்.

இனிமைகொள் பாலுந் தேனு மியைந்த
கனிவுகொள் ளிதழமிழ் தாதவுயிர்க் காந்தை
இன்னிலத் திப்பிறப் பீந்துனை யேத்து
நன்மையை நலம்பெற நல்கிய பெற்ருேர்
பொன்னுள போது பொருந்தியஃ தஃகில்
பின்னுற விட்டொழி பெற்றி யுறவினர்
புன்னர ககற்றப் புகலுறு விதியை

---

* ஆ + நந்து + அந்து + ஆதி.
† ஆன் + நந்து = கொல்லுகின்ற + அம் + தாது + இலகு.
‡ ஆனந்தம் + தா + திவ்விய, ¶ உறை = இருப்பிடம்.
§ ஆல் = நந்து = ஆக்கமாகிய + அந்தாதி = கடவுள்.
* இறு = ஈறு என்பதின்குறுக்கம், † அசனி ‡ நனி = பெருமை.

யுன்னி யுரிமைசெய் யொளிகிளர் மக்கள்
தனபதி நாணித் தன்னிலு மேலாத்
தினமதி வண்ணஞ் சிறுகாச் செல்வம்
கான மென்றுங் கனிவுற வோங்கி
வானம் நண்ணும் வளங்கொள் வீடு
இன்ப மெல்லா மினிது சுகிக்குந்
தன்மை பொருந்தத் தகைசே ரிளமை
இன்னவு மிச்சைகொள் பிறவு மெழிலுற
மன்னுதல் பொருளென மயல்கொளிவ் வெளியனை
முன்மேற் சொற்ற முறையுள யாவு
மின்னென மதிக்கு மேன்மையொண் முனியே
அன்னை சிசுவை யளிக்கு மாறுபோன்
றென்னை நின்பா லிதயம்வைத் தொழுகு
நன்னர் செய்து நலம்பெற வைத்ததற்
கென்ன புண்ணிய மியற்றின னறியேன்
புனலிடை நிலனும் பொங்கழற் புனலும்
அனல்வளி யகத்து மஃதுவா னடங்கும்
அனகடை யுகந்தொறு மழியா மறையின்
அனகனே யென்றுன் னடிசா ரன்பரின்
வனச மலர்ப்பதம் வணங்குறு தொண்டர்
இனம்நிறை தஞ்சையி னேற்றம் விளங்க
நனவொடு வந்தொளிர் நன்மணி விளக்கே
மனையற னிகந்த *வாகைகொண் முனியே
முனிவர்கள் போற்று மோனநா யகனே
தனையினை பிரமா னந்தமா தவனே
தனியுல குறவுபூண் டாசனேற் கிரங்கி
வினைத்தொடர் புறுக்கும் வீடுபே றருள்வாய்
மனமுறக் கொண்டுவிண் மதிக்கவும்
கனமுறப் புகழவுங் கனிவினிம் மண்ணே. (கஉ)

## இரதபந்தம் — 10 தட்டு.

### வெண்பா.

---

மண்மகளிர் பொன்பண்டம் மாண்பண்பன் மானதந்தேர்ந்
தெண்வளர்நன் ஞானமிவை யீயுமா—லொண்மது

---

*வாகை = தவம்.

நால்வர வீயே நணுகபி ராமி புல்கு
மால்பிர மானந்த மான். (கரு)

## கலித்துறை.

மாணில ளாகித் தவன்பிர மானந்தன் மாட்சிதனை
நாணிலள் பேச நயந்திலள் தோழி நலந்தரற்குப்
பூணில ளாரம் பொருந்திலள் தூக்கம் புலன்களிப்ப
ஊணிலள் பேதை யவனணி வந்திடி லுய்குவளே. (கசு)

## விருத்தம்—சந்தம்.

உய்வழி யிறைவ னருளினேர் தந்தா
    ளுரிமையார்த் துன்னுறு பணிசெய்
தெய்துறு *கிழமை மனதினேர் கொண்டே
    இளநலார்க் குன்னுறு நசையை
வெய்தென வொருவி லுரவுளோர் மண்டோர்
    வெளியின்வாய்த் துன்னுவர் முறைமை
மெய்வகை யொழுகு முனிபிர்மா னந்தா
    விரகிலேற் கந்நிலை யருளே. (கரு)

## எட்டாரச்சக்கரபந்தம்.

### அகவல்.

"நிலவுமுள் ளொப்பி வந்தனை நேர்ந்தந்
தன்மைசார்ந் தார வதனந் தேசலர்த
லையயர் பக்திமா வமுதருத் திடுவான்
பிறங்கன்மன் னவணி பெட்புட னுள்ள
நிலைமதி தஞ்சை நிலைதவன் பிரமா
னந்தனேர் தருவ னன்மைகொள் ளகனையே"
எனவா றடிகொ ளிக்கவி தன்னை

*கிழமை = குணம்.

எட்டார்ச் சக்கர பந்த மென்பரால்
சுரமிகு * நாப்பண் சூழ்ந்த குறட்டில்
"பிரமா னந்த முனிவ" னென விளிப்பெயர் க0
இதமுற வருத லியாவருங் காண்க
பாவினந் தம்மிலிப் பாவும்
மேலதா மென்று விளம்புக வானமே. (கசு)

## அட்டநாகபந்தம்.

### வெண்பா.

---

வா * னந்த மேனீ வரமீ குருபிர
மானந் த †பிதிர மாகுண—மானவ
மாய மயலைமா ருததக வானீக்கு
தூய தொ ‡ வவமர்த் து. (கஎ)

### கலித்துறை.

---

அம் * பர வானையிற் பூணூர்தி யாக்கொள்ளு மையவென்றை
யம் † பர வானை யடியவர் தேர்பிர மானந்தவை
யம் ‡ பர வானை யவம்பணு காம லடியனுக்கா
அம்ப $ ர வானை யமன்கரந் தோட வளித்தருளே. (கஅ)

---

*நாப்பண் = மத்தி.

* வான் = மேகம் + நந்த = கெட, † பிதிர் + அம் + மா + குண, ‡ ஒவ்வ = பொருந்த.
மேலும் * வான் + அந்தம் = எல்லை + மேல் = ஏழாம்வேற்றுமை "இல்" + நீ = தொடு எனினும், வான் + அந்தம் + நீ = நீத்த எனினுமமையும்.

* அம்பு + அரவு + ஆனை = ரிஷபத்தை + இல் + பூண் + ஊர்தி † ஐயம் + பரவா + நை ‡ ஐ = ஐந்து + அம்பர் = மன்மதன் + அவா + நய + அம்பு $ அம் + பர + வான்.

## விருத்தம் — சந்தம்.

தனதன தந்தத் தனனா தந்த
தனதன தந்தத் தனனா தந்த
தனதன தந்தத் தனனா தந்தத் —— தனதானா

அருளது குன்றத் தெருளே பொன்ற
வடர்வினை வந்தெற் றிடவே யிந்த
வவனியின் மண்டித் திரியே றுண்டி*ட் —டிடைமானார்

அபிநயம் விஞ்சிச் செயவே சிந்தை
யவர்வச முங்கித் தகையே யின்றி
யலைதர நந்தித் துயரே கொண்டிட் —— சலியாதே

பொருளினை வம்பிற் கிறையா தெந்தை
புகழ்மலி தொண்டர்க் கனுகூ லங்கொள்
புரிபணி யங்குச் செயவே சிந்தித் —— திலனாயேன்

பொலிவுசெய் கஞ்சப் பதமே லன்பு
பொழிதர விஞ்சைத் திறனே விஞ்சு
பொருவரு சந்தக் கவிபா டென்றெற் —— கருள்வாயே

இருளமர் கண்டத் தரனே யண்ட
விரைநகர் தொண்டைக் கனிவாய் விண்டு
இதழ்மலி கஞ்சத் தயன்மே லொன்றப் —— பதநாடி

இமமலர் சிங்†கத் துளையே சென்றெ
ணிலகிய வெண்டிக் கிறையோ ரெங்கு
மிசைமவு னந்துய்த் துயர்பே ரின்பத் —— தமர்மேலோய்

மருளுறு மந்திக் கணம்வார் தெங்கு
மணம்நிறை மந்தக் களிதே னுண்டு
மரனுறு கொந்துக் கனியே சிந்தித் —— திரிபோதோர்

வயல்வளர் கஞ்சக் களையே கிண்டு
மளர்கிளர் சங்கக் கவிமே லுந்து
வளமமர் தஞ்சைப் பிரமா னந்தப் —— பெருமானே. (௧௯)

---

*இட்டு = நண்ணிய, † சிங்கத்துளை = அரித்துவாரம்.

## அகவல்.

"மான நேயமர் மாரமை நாதா
தான தாபத சார்மன நாநா
ஞான நேர்பணி நாயக வானே
வான னபிர மானந்த வாமனே" என்னுமிரட்டை
நாகபந்தத்தை இவ்வகவலின்முதலக்கரங்களாகவைத்தியற்றியிருக்கிறது. ஒற்றெழுத்துக்களை இரண்டாவது எழுத்தாக வைத்திருக்கின்றது.

மானச மென்றும் வரினுருக் குதவுநன்
னலத்தினில் வைத்தொளிர் நள்ளிநேர் மாந்தர்
நேயமா யுறையெழின் முகவைநீ ணகரை
யன்புடன் பிறப்பிட மாக்கொண் டிதழவிழ்
மணியமர் நீல மலர்மணம் வீசக்
கார்படிந் தற*லயில் கயஞ்சூழ் தஞ்சையை
மாண்பெறு மன்பர் வணங்கித் தாண்மல
ரன்புடன் சென்னி யணிந்து வினைசெய்
மையலை யொழிக்க வாழ்நக ராக்கி
நாத விந்தெனு நன்னிலை நாடித்
தாழ்மையில் கோயில்கொள் சால்பு கெழீஇய
தானநன் சிக்கத் தம்பூ ரென்றே
னயந்து வியந்து நன்குறை நாதன்
தாரக பிரமா னந்தன் றாண்மலர்
பணிபவர்க் கும்மையில் பண்ணிய வினைதரு
தன்மையிற் றண்டந் தருநமன் பகையும்
சாகரஞ் சூழ்புவி தன்னிற் சனனம்
ஆர்வமோ டுதவு மந்த † ண னன்பும்
மதிநிகர் முகமு வாயிதழ்த் துவரும்வா
ன ‡ கநிகர் முலையும் நகுமுகிழ் நகையும்
நாகுறழ் களமும் பாகுமென் மொழியும்
நா $ க மலிதரு நா ¶ கச் சாரல்சேர்
ஞான மொன்றிய நற்றவ ருரமன
னலிவலி நோக்குடை நாரியர் தொடர்பால்
நேர்நின் றனை நெற்றிக் கண்டிறந்
தார்த்திடச் செய்மத வங்கச னுண்மையும்
படி * யிற் றனைநிகர் பான்மையுள் ளவர்மண்
ணிலரெனு மங்கரத் தியல்பையு மெற்றீ

நாய்பே யெனதென நரியுமென தெனவா
யப்ப னெனதென வணைம ¶ னை யெனதென
கனலென தெனநன் காடுமெனதென
வானுற வோங்கு மலையின் மரணி
னேச முடன்வதி கழுகுநேர்ந் தமர்செய்
வாய்மை யுடல்வாய் வா || ர வெறுப்புமன்
னகைமணி முடிமனர் நானில வாட்சிமன்
னவனியி லுறுபொடி யாகவெண் ணறிவும்
பிரமையி லடியார் பிரியமா வுண்ணுமா
ரமுத வெச்சி லருந்தக மகிழ்வும்
மாய்வுவந் திடத்தும் மனம்பதை யாத்திற
னலம்படைத் திங்ங னடைபெறு மாண்பும்
சந்ததந் தெய்வ பத்தியே சார்ந்து
தனிக்கல் லாடையுந் தகைமைகொள் கண்டியும்
வானிற நீறு வளம்பெற வணிந்த
மகிமைகொள் ளடியார் வணக்கமும் பணிவும்நன்
னேய முடனே நேரும்நீ ணிலத்தே
மேலுரை யடிகளில் விளம்பிடு மாறு
பதினெட் டிருபத் தாறுநாற் பத்தொன்
றென்னு மடிகளி லியம்புமுற் சீர்களி
லிரண்டாமெழுத்து மிசைத்த மற்றைய
வடிகளின் முதலக் கரங்கள் கூட்டிடில்
“மான நேயமர் மாரமை நாதா
தான தாபத சார்மன நாநா
ஞான நேர்பணி நாயக வானே
வான னபிர மானந்த வாமனே”
எனவோ ரிரட்டை நாகபந்த
விருத்த மிசையின் விளம்பின னதையுல
கன்புட னமைவி னுய்ந்து
மகிழ்வினிற்கொள்வரான் மரபுளி தயையினே. (௨௦)

---

* அறல் = நீர், † அந்தணன் = பிரமன், ‡ நகம் = மலை, $ நாகம் = புன்னை, ¶ நாகம் = மலை, * படி = பூமி, ‡ மனை = மனைவி, † வாரம் = அன்பு.

## மும்மண்டிலவெண்பா.

இரண்டாவது மூன்றாவது சீரைவைத்துவாசிக்கி னுவெண்பாக வமையும்.

தயையேதே மானந்தா தாந்திமந்தா வான்பேண்
தயிரியந்தா ஞானந்தா சாந்த—நயவருள்தா
தானந்தான் சார்ந்தாள் சவாசந் தருபிர
மானந்த தேர்ந்தத வா. (உக)

மானந்தா தாந்திமந்தா வான்பேண் தயிரியந்தா
ஞானந்தா சாந்த நயவருள்தா—தானந்தான்
சார்ந்தாள் சவாசந் தருபிர மானந்த
தேர்ந்த தவாதயையே தே.

தாந்திமந்தா வான்பேண் தயிரியந்தா ஞானந்தா
சாந்த நயவருள்தா தானந்தான்—சார்ந்தாள்
சவாசந் தருபிர மானந்த தேர்ந்த
தவாதயையே தேமானந் தா.

### கலித்துறை.

தேருமந் தோணி தமமோல் சனம்நேர் சிகரந்தளி
யோருஞ் சதமெழில் பூரந் தராதர மொன்றிவரத்
தேரி லெவையெவை வேண்டிடு மோவவை சேர்முனியே
பாரி லடியர் விரும்பிய யாவும் பணித்தருளே. (உஉ)

| | |
|---|---|
| அம் = தோணி = அம்பி = பி | பிரமானந்த |
| தமம் = ஒல் = தமரம் = ர | |
| சனம் = நேர் = சமானம் = மா | |
| சிகரம் = தளி = சினகரம் = ன | |
| சதம் = எழில் = சந்தம் = ந் | |
| பூரம் = தராதரம் = பூதரம் = த | |

### விருத்தம்—சந்தம்.

பணிபெறு பிரமா கங்கா பதியவற் றுன்பட் டானோர்
பகர்திரி குணமே கொண்டார் படருமப் பண்புற் றோரா

துணர்வுற நினையே யண்டா வுறுபுவிக் கன்புற் றோதா
துரைமறை கலையே கந்தா வொறுமயற் றுன்பற் றுசோ
ரணுவள வனுகா தஞ்சா தருளுனைச் சிந்திப் பேனோ
லசலபி ரமமா மென்றே யறைதரச் *சங்கிக் கேனோ
எணவரு பொழிலே விண்டா வெழிலொளித் தஞ்சைத் தேவா
விசையிசை பிரமா னந்தா பணியெனைக் கொண்டுற் றுயே. (உ௯)

## அகவல்.

" பதினாறு பேறும் பரம நிலையு
மிதமா வடியருக் கீமால் துதிகொள்
ளரிய தவமிழையென் னையனுந் தஞ்சை
குருபிரமா னந்தனெங் கோன். "

இவ்வெண்பாவினுள்ளவெழுத்துக்களியாவுமொவ்வொரு
அடியின் முதற்சீரினிரண்டாமெழுத்தாகவரவியற்பட்டது.

ஆபத் தெனைத்து மளிக்கும் புலன்வழி
*மதிதரு வேலை வாரிடைக் குமிழிபோல்
தானுநினைவு சரியைசெய் திறனிலேன்
கூறு கிரியை குயிற்றலா மென்னில்
அபேத மின்றி யருமறை விதிமுறை
யாறு கிரியைக ளாற்றத் திடமிலேன்
செம்மையில் வாசி செலவுள் ளடக்கி
தபமிகு யோகஞ்சாதிக்க லாமெனில்
திரமனங் கூடா திரிகைபோற் சுற்றி
யமர்கில திறையு மந்தோ சிறியேற்
†கநிர்த மொன்று வமைவு வாய்ந்த
நிலைதரு யோகம் நினைக்கிற் றாரமே
ஆயுள் வரையதை யடையத் திறனிலேன்
திமிருற வாக்கைத் திடமு மில்லேன்
இத்தித் திரிவிதத் தெட்டா தாகி
ஆமா றறியா வனேக சமைய
நுவலரு பேதம் நுழைவதற் கொண்ணுக்
கடிகொண் ஞானங் கதுவுற வுன்னில்
பயமுறு மவித்தை படிந்தி ருத்தலா
லருமையி னுய்பவஃ தடையும் பான்மைகொள்

*சங்கிக்கேனோ = எதிர்மறை.
*மதி = மத்திக்கப்படுகிற † அநிர்தம் = மாயை.

பக்குவந் தானும் பார்க்கி லிலையுள்
சேகீர் வாதவூ ரற்குத் தென்முகன்
ஆடா ரருளிய வந்த ஞானந்தான்
ஒல்வதெவ் விதமெனி னுண்மைப் பூரணி
சதுர்பெறு குருவின் றாழிணைத் தொழும்பால்
துதிபெற வருந்தற் சுதந்தர மெனக்கிலை
மாகொன்றை சூடி மாதவ ஞன்முகன்
உள்ளினு முலப்புறு வுறுதிகொ ளங்கிலை
அளப்பரி தாய வறிஞரைச் சார்ந்து
தெரியலா மென்னிலச் சீர்பெறு குரவரை
இயல்குறி குணந்தெரிந் திசைதல் வேண்டுமால்
இசமுறு மக்கமு மேரமர் நீறுஞ்
சுவடியும் பிரம்புந் தூக்கிய தோளுங்
குமிழ்பொற் குறடுங் குலவுசெவ் வாடையுங்
குழையுஞ் சடையுங் கோத்தக வுடையராய்த்
தாயென் றெவரு மதிக்கத் தக்கதா
வின்னிசை யுடனிசை யெழிலுறப் பாடி
அனைவரு மருண்டுதம் மரும்பொருளனைத்தும்
ஈய மயக்கிக் கவர்குந ரெயினரின்
கனவினுங் கருதொணுக் கட்டுடைப் பாவம்
அந்தோ செய்துசெய் தலைவேட தாரிக
ளிதயத் தெண்ணி லீங்கிவர் பலரே
நெஞ்சே யுனக்கொரு நியதி சொல்லுவன்
நசையுறக் கேட்டு நடக்கி னுய்குவை
மிகுநெல் மலிகதிர் கவரி வீச
வொருநகந் தொலிசெய வம்புய மலரிவர்ந்
தபிநயித் தோதிம மம்பெடை யொடுதழீஇத்
திரமுற மகிழுஞ் சிக்கத் தம்பூர்
விமான மேவி விளங்குறு கடவுள்
மனதுக் கினிய மாதவப் பிரமா
னந்த முனிவன் நளினத் தாளிணை
சதமென நம்பித் தாழின்முன் னியற்றிய
கானென் பாதகங் கனலுணத் தீந்து
தீங்கற வொழிந்து செழித்தபே ரின்ப
மகோததி படிந்து வாய்மடுத் துண்டு
நன்குற வாழ்குதி நானு மூழி
மேலடி களின்முதன் மேவு சீர்களி
லிரண்டா மெழுத்தை யிசைவுறக் கூட்டில்

"பதினாறு பேறும் பரம நிலையு
மிதமா வடியருக் கீமால் — துதிகொள் ௯0
ளரிய தவமிழையென் னையனுந் தஞ்சை
குருபிரமா னந்தனெங் கோன்" எனவோர்
வெண்பா வரவே விளம்பினன்
மண்ணில மன்றி மதிக்கவா னிலமுமே. (உச)

## பதும பந்தம்.

### வெண்பா.

வா*னமன ஞானவி†ன மானவ‡ன மோனம§ன
வான‖வினம் நாணங்கொள் வண்மையொன்ற — தானம்
பரமபத மாக்கப் பணித்தருணீர் தஞ்சை
யிப்பிரமா னந்தமுனிக் காம். (உரு)

## அட்டதளபதும பந்தம்.

### கலித்துறை.

*ஆனத்த மோர்பண் முகிறாண் கவர்கந்தி யார்வமெட்டே
மானப் பிரதி பதமென்ப வற்றுள மத்தியமாம்
தானத் தெழுத்தெண் பதுமத் தளத்திற் றருபவனே
மோனத் துறுநின் னடியார் நடுநிற்கு மொய்ம்பருளே. (உகா)

### விருத்தம்.

மொய்ம்புபிடி வாதமரி கிளியென் றிந்த
மொழிநான்கி னடுவதுவுந் தானே யாகி

*வான = காற்று + மன = மனம், † இனம் = ஒரேயினம், ‡ வன = அழகுள்ள, §மன = பொருந்த, ‖வானவினம் = மேகக்கூட்டம்.
*ஆன் = கபிலை, அத்தம் = கரம், ஓர்பண் = கமாஸ், முகில் = கனம், தாண் = கந்து, கவர் = கதலி, கந்தி = கமுகு, ஆர்வம் = கனிவு. நடுவெழுத்துக்கள்கூட்டில் "பிரமானந்தமுனி" என்றுவருதல் காண்க.

மொய்ம்பு = இகல் = இல் = தஞ்சை; பிடிவாதம் = அடம் = அம் = மவுனம்; அரி = சவுரி = சரி = சமபங்கள்; கிளி = கிள்ளை = கிளை = அன்பர்கும்பலளித்தல். மத்தியெழுத்துக்கள் "கடவுள்."

ஐம்புலனி லெஞ்சியவை விதியாற் றஞ்சை
யடரிடமாக் கொண்டுமேன் மவுனந் தன்னை
பம்பியினி துறக்கொண்டு சமயமெல்லாம்
பகருறவே யா*க் கொண்டு மன்பா லன்பர்
கும்பலை†யா வளித்தவனு மாரே யென்னிற
கூறுபிர மானந்த முனிதா னன்றே. (உஎ)

## அகவல்.

" கெண்டை யொண்கணுந் துயிலு மென்னிறம்
பண்டுபண்டுபோ லொக்கு மிக்கசீர்த்
தொண்ட ரிட்டபூந் துளவின் வாசமே
வண்டு கொண்டுவந் தூது மாகிலே"

என்ற வண்டுவிடுதூதை ஒவ்வொருமுதற்சீரின் இரண்டாவது எழுத்தாகவர வைத்திருக்கிறது.

ஏகென் றிருமருங் கினம்விலக் கதிபர்கள்
அண்டின மாந்தரை யகற்றப் பவனி
யடைவுடன் சென்றா னடியிணை யிறைஞ்ச
வேயொன் றியபுகழ் விரியன பாய
வண்ண லாணையி லஞ்சொலின் பாவில்
சுகமிகத் தமிழிற் றுறவோன் சேக்கிழார்
மாணுறு பத்திமை மழைபொழி தாநவில்
அந்தமி ெரண்ட ரரும்பெறற் புராண
முதுமைகொள் சரித்திரா முதஞ்செவி மடுத்துச்
செயிரறு மனத்தொடத் தெய்வதத் தொண்டர்
பாலுறு பத்திநீர் பள்ளம் பாய்ந்தென
லாமென் றுலக மறையவேற் கனவே
யின்புற வடைந்த வியல்கொளிப் பேதைதான்
வானிழி முத்து மாசுண மணியும்
நிறனுறு செந்நெலி னித்திலக் குவையும்
அம்மதி நிலவுசெய் யவிரொளி யானும்

*ஆக்கொண்டு † ஆ = இலையாக.

இபமருப் பெனவோங் கேந்திள முலையார்
மாண்புறப் புனையணி வைர மாதிக
ளிடுமொளி யானு மிராப்பக லறியொணுச்
சீபதி நகர்நேர் சிக்கத் தம்பூர்
நண்ணி யதனி னண்புறக் கோயில்கொள்
நடுநிலை கொண்டவிர் பிரமா னந்தத்
தபோமணி சீரார் சரித மங்கலார்
பாலொன் றியசொலால் பகரக் கேட்டனள்
அக்கண மென்சொல்கேன் ஆவா வம்மகள்
மிகுமய லுழந்து மேனியு மறந்தாள்
அமிழ்தரு நிலவுகண் டனலென வலறுவள்
மிக்கெரிந் துள்ளம் விதிர்ப்பத் தன்கால்
நகமதைப் பார்த்த வண்ணம் நகுவாள்
மாசி ரணிகலன் வாங்கி யெறிவள்
வேர்த்து முகமெல்லாம் வேறு படுவள்
சத்தமிட் டலறுவள் சாதிப்பள் மவுனம்
யாதொன்று மருந்தில லெழுவள் விழுவள்
கண்ணுறங் கிலளால் கங்குலும் பகலும்
தடவுவள் தரையினைத் தாண்மலர்க் கைகளால்
அரிமுரல் கடிமல ரணிகுழ லணியாள்
உட்கலுற் றடவியென் றுரைக்க விரிப்பள்
சுடரொளி மேனி தூசு படிந்திட
விபூதி நெற்றியின் மிலைதல் மறந்தனள்
கந்தகஸ் தூரி கனதன மணிந்திலள்
கதுமென வுயிர்ப்பள் கண்மழை யுகுப்பள்
களகள வெனவே கழன்றுகை வளைகள்
புவியில் வீழ்த்திப் புலம்பியே நைவள்
தென்றல்வந் துயிரை தேர்கின்ற தென்பள்
நாவால் நலக்கிப் பிரமா னந்த
வசல மாதவ வென்றே யறைவள்
நாமேற் கொண்டு நடுங்கின ரயலார்
நுவலுவ தெவனிந் நுண்ணிடை படுந்துயர்
வண்டுகாள் நீவிரிம் மகள்குழன் மலர்த்தேன்
மடுக்கா விடினு மாதவன் முர்த்தேன்
பாகொன் றிடத்துத் திடுபான்மை யிகந்துமை
யண்மினர்க் காத்த லழகென வாய்ந்து
கடிக வோடியக் காண்டவர்க் கிறைபால்
விவரமா மகள்படு வேதனை விரித்து

வந்தவள் மாலின் மயக்க மறுத்துக்
குதூகலங் கொள்ளக் குயிற்றுக வன்றேல்
சதுருட னவன்றுர் தருக வலதேற்
கோமா னணிமலர்க் கொங்கு கொணர்ந்து
மகிழ்வுட னூதுக வூதினிம் மடமயில்
கிலேசம் நீங்கிக் கிளருமுன் போன்றே கூ௦
மேற்சொல் லடிகளில் விளம்பிய முற்சீர்
இரண்டா மெழுத்தை யின்புற விசைக்கின்
"கெண்டை யொண்கணுந் துயிலு மென்னிறம்
பண்டுபண்டுபோ லொக்கு மிக்கசீர்த்
தொண்ட ரிட்டபூந் துளவின் வாசமே
வண்டு கொண்டுவந் தூது மாகிலே."
எனத்திரு மங்கை யாழ்வா ரிசைத்த
பாசுர மொன்று வரவே பகர்ந்தனன்
மீதலத் தோர்களும் விரிநீர்ப்
பூதலத் தோர்களும் போக்கிட மாலையே. எ௦ (உஅ)

## சதுரங்கபந்தம்.

### வெண்பா.

மாபி*ன் பிரத்து†தர மாத்துய்க்கு மானத்தேர்ச்
சோபித நந்துஞ்சீர்ச் சுந்தரந்தங்—கோபரனே
மாபர நன்னீ‡த வாதந்த மாரபி
மாபிர மானந்த வா. (உகூ)

### கலித்துறை.

வானந் தராதல மென்று மடைதரு மாமகிழ்வும்
ஞானந்துன் மாந்தர் மன§மிகு நீர்மையு நாடுபிர

*மாபின் = பிராட்டி, † பிரஸ்துத = மிகுபுகழ் + ரமா = இலக்குமி, ‡ நல்லநீதியையுடைய பிர்மவாதமாகிய அன்னத்தைப்புசிக்கின்ற பேரறிவுடைய.

§இருத்தலென்றும்,மிகுத்தலென்றும் பொருந்தும்.

மானந்தன் கோயில்கொள் சிக்கத்தம் பூரென் வளநகர்க்கண்
வானந்த † லோங்கிடு மா‡னந்த மென்று வழங்குதுமே. (௩௦)

## விருத்தம்—சந்தம்.

வழங்குறு பலநூன் மொய்ம்பினு ளெஞ்சம்
மதர்வுற வகமதத் துணிவா
லொழுங்கினை யிழவா நின்றுளே னேந்தே
னுணர்வுறு பதமலர்த் துணையை
அழுந்துற வினிமே லொன்றுநா ளென்னை
யழகமர் திருவருட் கடலே
தழங்கிய பிரமா னந்தனே தஞ்சை
தனிலுறை பரமசற் குருவே. (௩௧)

## அகவல்.

குறுமுனி தனக்குக் குவலயந் தன்னிற்
சிறுகுசீர் மீளச் சீதரன் றெரிந்தருள்
தென்கலை யொன்றே தெள்ளிதிற் கலைகளில்
மன்னிய கீர்த்தி மருவிய தென்று
தெரியார் யாரே தீயுண் ணென்பு
தெரிவை யாகித் தெரிதர லுற்றதும்
தெண்ணீர் கயத்துத் திரிதரு வன்மீன்
உண்டபாலனை யுயிர்த்துயிர் பெற்றதும்
அரவின் கடியா லாருயி ரிழந்த
உரமிகு மைந்த னுயிர்பெற் றுய்ந்ததும்
பாண்டியனவையிற் பலரு மறிய
ஈண்டியோர் பொற்கிழி யிறுத்த வியல்பதுந்
தெய்வப் புலமைச் சீர்கொள் கவிஞர்
எய்தருங் கீர்த்தி யியையப் பெற்றதும்
மதுரா புரியின் மாநில மேத்தச்
சதுருடன் சங்க நிலவிய சால்பதும்

---

† நந்தல் = வளர்தல். ‡ ஆனந்தமென்றும்; மால் + நந்தம் = சங்கநிதி என்றும் பொருள்படும்.

யாரு மறிவா ராயினு மக்கலை
யொரு விதமா யொருத லரிதே
யோரினு மமுத மொழுகுபா வுரைத்தல்
யாரினு மரிதென யாரு மறிவார்
அத்தகைப் பாவை யறைதிற னுறினும்
பத்திச் சுவைகொளப் பகர்தலு மரிதே
அவ்விதம் பகர்திற னமையினு மவனியோர்
செவ்வையி னிசைபடச் செப்பலு மரிதே
அச்சால் பறைதிற னடையினு மவனி
மெச்சா நிற்க மெய்யடி யார்பணி
மேன்மேற் றென்று மேதினி மகிழப்
பான்மையின் வியத்தகப் பகர்தலு மரிதே
செழுமைசா லிவ்வகைச் செவ்விமுற் றமைந்த
வழகன் யாரென்ன வறைகுவன் கேண்மோ
அஞ்சலி செய்தே ழிசையா றங்கமும்
விஞ்சுறு மைந்து வேள்விநான் மறைகளும்
மூன்று தீயு மொழியிரு போதும்
என்றுங் கொன்று மெழிலுறு செல்வச்
சிக்கத் தம்பூர் சேர்ந்துசீ ரோங்கு
மிக்கத் தம்பெற விரும்பினர்க் களிக்க
வானிமிர் தளியின் மகிழ்வுடன் கோயில்கொள்
ஞானியாந் தஞ்சை பிரமா னந்தன்
அன்னவன் புகழை யாரே யறைகுவர்
மன்னுயிர்ப் பாலருள் வாய்ந்துள வன்பும்
ஆதர வான வருமறை யோலிடு
சோதர தத்துவஞ் சூடுந் தன்மையும்
பின்ன மின்றி பிறருக் குதவி
என்று மிதஞ்செய் யெழிலுறு மாண்பும்
வானும் வந்து வணங்கிட வைகலும்
தானே கொண்ட சாந்தமா தவமும்
மண்ணி லோவா வளர்பெறு மாசையை
திண்ணென மாய்க்குஞ் சீர்பெறு திறனும்
எத்திசை களிலு மிடமறப் பரவிச்
சித்திகொள் பிரம ஞானத் தேர்ச்சியும்
ஊனம றுடலி லுழலுறு மந்தி
தானிகர் மனதைத் தடுத்திடு யோகமும்
அண்மினர் தமக்களித் தருளுவ
னெண்டிசை பரந்த விதமிகு ஞானமே. (௫௨)

## நான்காரைச் சக்கரபந்தம்.

### வெண்பா.

ஞானந் தகவுறுமன் னன்னர் பரசுக
வானந் தருவு*வ்வுன் மாபிர-மானந்தன்
ஞாலமுன்னு தாள்வாய் நணுகுநர்க ணேறுமே
சீலமன்னு பூமாது தேர். (௩௩)

### கலித்துறை.

தேரைய*நாக மியக்கித் திரிபுரஞ் செற்றசிவன்
தேரை†ய னாகமதிபிர மானந்தத் தேசிகனே
தேரை‡ய நாக ரிகவைத் தியர்கள் சிகிச்சையினால்
தேரை§ய நாகமுன் னாக்கிலை நோயின்மை செய்தருளே. ()

### விருத்தம்.

அருளையிகழ் பொய்களவு பலியு மாடி
அந்தணனச் சுதனரனு மந்தோ வோடிச்
சுருளிலகு தாமரையிற் கூடலிற் றாம்பில்
துரிதமுடன் புக்கொழித்தார் சொலிலார் தஞ்சம்
இருளுலகி லினியிறப்பும் பிறப்பு மெய்தி
இடருழக்குங் கொடுந்தீமைக் கஞ்சி யேக
உருளிரவி பிரமானந் தன்பா லுற்றேன்
உயர்பிரமா னந்தச்சீ ரொருவ னென்றே. (௩௫)

## திருவெழுகூற்றிருக்கை.

### அகவல்.

ஒருகூட ராழித் தேரோன் சூழ
திரும்பா ரொருதனிச் செங்கோ லோச்சு
மொருதிற லவுணர் கோமான் பக்க

---

*உவ்வு = தவம். குறட்டில் “மவுனமான்” வருதல் காண்க.
*தேரை = தேரினை + அம் + நாகம் = விண்; † தேர் + ஐயனாக; ‡ தேரையன் = அகத்தியரின் சீடன்; § தேரை + அ + நாகமுன்.

விருபிறப் பாட்சி முந்நூன் மார்பனு
மிருகை யேந்திய வொருதிரு மாணியா
யொருபெருஞ் செல்வ விருநில மூன்றடி
யீதியென் று நானிலங் கவர்வான்
மூவுலகீரடி யொருங்கே யளந்தோன்
ஒருதிரு வுந்தியி லிருந்துற் பவித்து
முந்நீர் ஞாலம் படைத்தநான் முகத்தோன்
ஐந்தொழில் பயிற்றிய வானந்தத் தாண்டவன்
நால்வாய் முகத்தோன் மூன்றிரு முகவன்
தத்துவ முணர்ந்த தாபத ரிமையோர்
ஒருமையி னொருவா திருபத முப்போ
துள்ளி யிறைஞ்ச நாற்றிசை விளங்க
நடிக்கா நின்ற வைந்துப நிடதத்
தறையும் பரம்பொரு ளறுகுண பூரணன்
ஐம்பொறி கரணநான் கறிவரு மேலோன்
முப்பகை வென்றோ னிருமையு மாகினோன்
ஒருபரம் பொருளென் றுரைசெயு மொருவன்
இருசர ணடிய வெந்தை யுலப்புறு
முக்குறும் பகற்றி நாலாம் பாதமேல்
ஐந்தாம் பாத மானவை வல்லியம்
அறுதியாம் பதமென் றன்பு தழீஇ
எழுல கேத்த வாழிய சிந்தையி
னஞ்சலி செய்துமெய் யன்பர்போற் றிசைப்ப
நாற்பொரு ணல்கி மூவகை யான
இருவினை போக்கி யொருநன் னிலமகள்
ஒருமுகம் போல விருள்வர வறியா
இரத்தின மாளிகை மும்மத வருவிதாழ்
புகர்முக முன்றில் நாற்புற மைந்து
கருவிகள் காரொலி கடுப்ப முழங்க
ஆறும் பொன்னி யனைய வாவணம்
எழுகடன் முழக்கின் களகள வொலியெழ
ஆறங் கங்களு மைந்துவேள் விகளும்
நான்மறை முத்தி நவிலிரு போழ்தும்
ஒருமித் தொலிகெழு தஞ்சை மாநகர்
ஒள்ளிய ஞான வுயர்பிர மானந்தத்
தழங்கு மணிக்காற் றவர்சிகா மணியே
நின்னிரு தாண்மலர் சென்னி சேர்த்தினேன்
அன்புகூர்ந் தடியனை யாண்டரு ளினிதே. (௩௬)

## விசித்திர இரட்டை நாகபந்தம்.

### வெண்பா.

தேன்மன்னு தஞ்சைநகர் தேர்குருவாத் தேசுற்ற
மான்பிர மானந்த மாதவ-வான்மன்றுன்
யோக மனுக வுலகறை யோமிசை
வாகமெற் கீதரவே வா.
வான்மன்றுன் னுவயமாண் வாய்க்கல்வி வாய்ஞான
மான்கனக ஞன்மறை வாயோர்த-லான்மான்
மனதி னுலக மனவே வரவன்
பினிஞா னதவ மிசை. (ருஎ)

### திரிபங்கி.

### கலித்துறை.

ஈயா யெனவே கனிவமை யன்ப*ணி ஈரமன்னி
ஓயா திறைஞ்சின் முனிவதை யெற்றுமா லோரலின்றி
ஏயா வருளை நனிபெற விங்கனே யேரளிப்பா †
னேயா லருள்வன் முனிபிர மானந்த னேர்மைகொண்டே.

### விருத்தம்.

நேர்மை யுடனணி பதமல ரணுகின்வா னுந்துமே
நேய மனதினி னளியுரை செயவவா நந்துமே
நீர்மை யமையுல குனதவிர் வினைசெயுங் காலையே
நேடி யயில்வது னிதயம னருள*ரிப் பாலையே
கூர்மை கொளவுன திசை†முறை தருவதா னந்தமே
கூறு மறைதொழு மடலன்மு னிபிரமா னந்தனே
சீர்மை யுறவுனி யணிவதி நான்மணி மாலையே
தேறி நினைநினை தரயிவ னருள்வதுன் வேலையே. ()

---

*அணி = நெருங்கி, † பான் = பொருட்டு.

*அரி = கடல், † முறை = புத்தகங்கள்.

## அகவல்.

வானந் தத்துமும் மாரி வளங்கெழு
வானந் தத்து வயணிறை தஞ்சைமன்
மானந் தத்துயர் வீசிய மால்பிர
மானந் தத்துர வோன்பதம் வாழியே.
இவ்விருத்தத்தின் எழுத்துக்களை இவ்வகவலின் ஈற்றில்
வரவியற்றியிருத்தல் காண்க.
வேலை யேந்திய வேட்பயந் தவன்வா
ழாதியங் கைலை யடியா வுள்ளன
பூந்தரு நிரைநிறை புயலினங் காட்டுந்
தேந்துளி துவற்றெழு சிலைகளுஞ் சீத
மேகங் கடுக்கும் விழுத்தகு வண்ணத்
தண்டுழாய் மாயன் தாண்மலர் பிடித்து
மண்மகள் திருமகள் வருட மகிழ்விழு
பள்ளிகொள் பாற்கட லாதியேழ் பரவையும்
புலைகொலை காமப் பூரிய வன்மா
பாதகமெரியிற் பஞ்சுசெய் மூரி
வரநதி யமுனை சரசு வதிதவ
வுயரிய வேழு நதியா வுள்ள
பல்லுடம் பழித்து மெல்லுான் மிசையுங்
கொடியசண் டாளக் கொலைஞர்கள் தங்கெ
ழீஇய மால்வினைக் கீறுசெய் மாண்விழு
வாரா ணசிசா கேத முதலவா
மெழுவகைப் புண்ணிய நகரங்க ளென்பன
செக்கர்த் துவர்வாய்ச் செழும்புயல் காட்டுந்
தனிச்சுடர் வண்ணத் தண்டுழாய்க் கந்த
மாலைச் சுடர்மணி மௌலி யெழுவாய்த்
தமனிய வெழுமதில் தழீஇய விழுமிது
திருவரங் கப்பெருங் கோயிற் செல்வ
நிலவிய திருத்தகு நிலைக ளாகிய
யழலுமிழ் கட்செவி யசைக்கசை சென்னி
யிளம்பிறை முடித்தோன் இன்பம் புரிந்துறை
யைந்தொழில் விளங்க வரும்பெற லானந்த
மாநடஞ் செய்யு மன்றுண் முதலாஞ்
சீரிய பலவாந் திருத்தளி யெனவிசை
நாணு தலங்கள் நடந்து கெழும
மெல்லடி புண்ணு மிறையுற வோடின்

யாதா மிதனு ளிடர்ப்பா டம்மா
பெரிது பெரிதாற் பெறுவன சிறியன
வல்ல துண்டோ வாற்றுதல் சுலபந்
தாம்பெறு பேறே சாலச் சிறந்த
தன்னதி யாதே லறைகுவ லொன்றித்
திரிகுறு புலன்கள் சிதற விடாது
கேண்மதி பணிலக் கிளைசூல் வயாவுய
வெய்தி யுயிர்த்த வெழின்மணிக் குவைகூர்
மழநில வெறிப்ப வாசமென் குமுதம்வீ
றுறவே முகையவிழ்ந் தொளிபெற மலர்ச்சி
செய்யுந் தண்பணை சீத வேலிய
புண்டரி கத்தடம் பொய்கையிற் கதலிமா
வொண்பனைக் கனிபழுத் தொழுகிய தேறல்
சொரிந்து பெருகிடத் துள்ளிநெட் டுடம்பி
னிளவரா லவ்வளி யேறியந்தர
மணவிய பூம்பா சடைக்கமு கொளிர்மா
வெரியுமிழ் துவர்க்கா யிணர்மடல் கீறின
வாகி யொழுகுநீ ரப் *பிர மிசைத் தாங்
தண்டலை புடையிற் றழுவிச் சிறந்த
சிக்கத் தம்பூர்ச் சீர்பெறு தலத்துத்
தேவர்கள் நிலத்தவர் தெளிமறை யோது
முனிவர ரேத்த முதுநான் மறைச்சிர
வுபநிட தத்தி னெண்பொரு ளுணர்த்துவோ
னுறுநிரு விகற்ப சமாதி யடைந்தோன்
பஞ்ச புலன்களைப் பாற்றிமெய் யின்ப
வடியா வாரிதி படியலுற் றோனித
மேவிய பிரமா னந்த வித்தவெம்
மானடி யடைந்து வாழ்த்தி மறவா
தேநினைந் திருமி னித்தகு வாழி
யடியரோ டளவளா யடைந்துய்மி னினியே
மேலடிக் கண்ட விழுமிய வீற்றெழுத்
தென்பன வீட்டிடி லேற்படும் நற்பா
"வானந் தத்துமும் மாரி வழங்கெழு
வானந் தத்து வயனிறை தஞ்சைமன்
மானந் தத்துயர் வீசிய மால்பிர
மானந் தத்துர வோன்பதம் வாழியே"

---

*அப்பிரம் — மேகம்.

எனவே
அன்னதின் பொருளுணர்ந் தவ்வழி யொழுகி
தெள்ளிதி னடையின் திருந்திய சீரே. (௪0)

## நான்மணிமாலை முற்றிற்று.

## வாழி.

---

வாழி மால்பிர மானந்த மாதவன்
வாழி பூந்திரு வாழ்தஞ்சை மாநகர்
வாழு நாரா யணசாமி வள்ளலின்
வாழி மாண்கவி நான்மணி மாலையே.

முற்றிற்று.

ஸ்ரீ

சிவமயம்.

ஸ்ரீமத்ஸ்ரீ வி. பிரஹ்மாநந்தஸ்வாமிகள்பேரில்

# இரங்கற்பா.

குப்புசா மிச்சாமிப் பெயர்முன் பூண்ட
குருபிரமா நந்தசா மிக்கோ மானே
அப்புலாமு லகம்விட்டு னன்பர் வாட
ஆயிரத்துத் தொண்ணூற்றே ழாண்டு மாதம்
செப்புமா கன்னிபவுர் ணமிமுற் றேதி
திகழ்பூரட் டாதிவெள்ளி சேர்ந்த நாளில்
ஒப்புகூவே றரியதொரு முத்தி யுற்றாய்
உன்பெருமை யார்பெற்றா ருலகி லம்மா. (க)

பிரமாநந் தச்சாமிப் பெயரை யிந்நாட்
பெற்றதனு லதன்கருத்துப் பிறங்கி யோங்க
கருமானு சாரத்தால் காலம் நேரக்
காசினிவிட் டன்பருளைக் கசிந்து தேட
தருமானுஷ் டானத்தால் ஞானஞ் சார்ந்தோர்
தன்மையுடன் தங்கியனு பவிக்குந் தக்க
பரமாநந் தப்பெறுதல் பாக்ய மென்றே
பரமாக்ய முத்தியினிற் படர்ந்தாய் மாதோ. (உ)

ஆயிரத்துத் தொண்ணூற்றே ழாண்டின் எண்ணம்
அடைவுடன்கூட் டிடிற்பதினே ழாகும் ஆயின்
ஞாயிற்றின் மேலொளிசெய் ஞானம் பெற்ற
நாதபிர மாநந்த ஞாலம் பேண்பொற்
சியிருக்கும் பதினாறு பேறும் சேர்ந்தாய்
திகழ்மீதி யொன்றுண்டு தேரில் ஏகம்
மீயிருக்கும் ஏகமெனும் வீடுஞ் சார்ந்தாய்
மேன்மையுன்போல் பெற்றவர்யார் விளம்பி லம்மா. (௩)

கன்னிதன்றன் னுமமதைக் கருதா துள்ள
காரணத்தால் கடவுளரெண் பிரமா நந்தா
அன்னமதி நின்பேரில் ஆக்ரந் கொண்டெண்
அகிலமெலாம் நினைத்தேடி யரற்ற விந்நாள்
சென்னிமதி மிலேவேணிச் சிவத்தோ டுன்னைச்

சேர்த்ததுகொல் சிறுமதியால் தேறி யஃதைப்
பின்னல்முடிப் பெண்மதியென் றியாரும்பேசிப்
பெருமையுடன் நின்மகிமை பேண வம்மா. (௪)

வாரணைதல் செய்கொங்கை மடவார் பேணு
மாதவர்க்கு மாதவனு வயங்கு ஞான
தாரணைகள் மிகுத்தகுரு பிரமா நந்தா
தரணியெலாம் நினைத்தேடித் தயங்க விட்டு
நீரணையில் லாதுநிலை சேமி யென்ன
நினையாம லதன்குமிழி யென்றே நேர்ந்து
பூரணைதான் நினைச்சிவத்தில் பொருந்தச் செய்த
பொற்பதனில் பவ்வட்டேர் பொருத்தம் அன்றே. (௫)

முதற்றேதி யென்பதினில் நீயே மோக்கம்
முறைமையினி லுற்றதுவும் மொய்ம்ப தாமால்
பதத்தேற்ற முறுசொல்லை பாரோர்க் கென்றும்
பகருவதில் முதற்றன்மை படைத்த லாலும்
பதத்தேற்றுஞ் செயலதனில் பகர்முற் றேதி
பண்புபெறு முதன்மைவாய் பான்மை யாலும்
கதத்தேற்ற முளர்காணுக் ககன வட்டக்
கனவெளியில் அத்தேதி கலந்தாய் நன்றே. (௬)

வாரிட்ட வனமுலையார் மயக்கின் வீழா
மாதவப்ர மாநந்த மாண்ப கேண்மோ
காரிட்ட மழையைவெலுங் கண்ணீர் சோரக்
கனவடியார் எல்லாருங் கலங்கி யேங்க
ஓரிட்ட மூர்த்தியழி யுலகிற் சீவர்க்
குளவாயுள் வரைநாழி நாமம் உற்ற
பூரட்டா திப்பெயர்கொள் நாள்தான் நின்னைப்
பூரணத்தில் சேர்த்ததுவும் பொருந்து மன்றே. (௭)

தெள்ளியசொல் தேவர்கட்குத் தெரிக்குந் தெய்வத்
தேசிகனை யனையசீர் பிரமா நந்தா
வெள்ளியெனும் வாரமுன்னுள் மேவு க்ரோத
வியாழனென நினைமதித்து விரோதந் தீர்க்க
எள்ளலுறு புகரென்னும் நாமம் ஏற்ப
ஈடுநின்பால் பட்டவன்பர் ஏங்கி நிற்ப
விள்ளரிய கைவல்ய விதேக முத்தி
ப[illegible] சாததுகொல் விதியே தம்மா. (௮)

தஞ்சமென யார்யாருஞ் சார நின்ற
தஞ்சாவூர் நினதூராத் தானிருந்தும்
பிஞ்சகனை யனையகுரு பிரமா நந்தா
பிரியமுடன் சிக்கத்தம் பூர்நீ பேணல்
மஞ்சுமிகு மச்சொல்லின் மர்மம் ஓர்ந்து
வளமுடனே சிக்கத்தம் கோடி நல்க
எஞ்சலினல் லின்பநிறை இலக்கி யத்திற்
கெழிலவ்வூர் அன்பரெண்ண இசைந்த தேரே. (௯)

மருத்தாதி வானவரும் மண்ணும் வாழ்த்தும்
மாதவபிரம் மாநந்த வாய்ந்த அன்பார்
விருத்தாச லக்குரிசில் வேய்கோ யிற்கண்
விரும்பியுடன் மேவினதும் விதியே யப்போர்க்
கருத்தாயில் பழமலையாம் கணிக்கில் நிற்கு
கைலைமலை யஃதாகும் கண்டா யங்ஙன்
மிருத்தாதி சனனமின்றி விதேக முத்தி
மேவினதும் பொருத்தமாம் விளம்பி லம்மா. (௧௦)

என்னிலகு சிந்தையினில் என்றும் நிற்கும்
எழிலிலகு குருபிரமா நந்த வீசா
பொன்னிலகு திருமுகமும் பொறையுந் தேசும்
பொறியிலகு திருமார்பும் புனைவெண் ணீறும்
மின்னிலகு புன்னகையும் வெற்பார் தோளும்
மெய்யன்பர் மனதின்முறை மேவ வைத்தே
தென்னிலகு சீவன்முத்தி சேர்ந்தாய் கொல்லோ
தெரிவரிதே திருவருளின் செயலை யம்மா. (௧௧)

பேர்பூத்த புகழ்பூத்த பெரியோர் பேணும்
பெலன்பூத்த சொற்சொல்குரு பிரமா நந்தா
கார்பூத்த கரமலரும் கஞ்ச வாயும்
கான்பூத்த திருப்புரமும் கருணைக் கண்ணும்
சீர்பூத்த செவ்வுடையும் செம்பொற் றாளுந்
திருத்தொண்டர் சிந்தையினில் திகழ்ந்து நிற்க
ஏர்பூத்த இலக்கியத்தில் இயைந்தாய் என்னே
இதுவுநின்றன் திருவிளையாட் டியல்பா மன்றே. (௧௨)

மண்ணிருக்கும் மாந்தர்பிணி வான்சேர் வண்ணம்
மாண்சொலளி பிரமாநந் தக்கோ மானே
பண்ணிருக்கும் வேதாந்தம் பகரும் பண்பும்
பாவாணர் ஏத்திசைப்பப் பண்ணும் பாவும்

தண்ணிருக்குந் திருவருளும் மௌனச் சால்பும்
தனித்தொண்டர் இதயமதில் தங்கி நிற்க
எண்ணிருக்கு மிசைத்துரியத் திலைந்தாய் கொல்லோ
இசைக்கருநின் இலீலையினை யென்சொல் வேனே. (கஉ)

பெருமைகொள எவ்வெவரும் பேணி நிற்கும்
பெரியவர்க்கும் பெரியகுரு பிரமா நந்தா
அருமையுடன் நின்புகழை யறைகு வோரும்
அன்பினுடன் நினதுபணி யாற்று வோரும்
கருமைவெலப் பாப்பொழியுங் கவிவல் லோரும்
கண்முன்னே நின்னுருவங் காணு நிற்க
ஒருமையுடன் பூரணத்தோ டொன்றி னைகொல்
உனதுதிரு விளையாட்டை யுணர்வார் யாரே. (கங)

அத்துவிதம் உலகெல்லா மாகி நிற்க
ஆண்டுநின்ற குருபிரமா நந்த—ஐயா
வித்தகத்தோ டரசுபுரி வேந்தில் ஊரில்
வீண்குறும்பர் தலையெடுக்கும் விளக்கம் போல
சத்தமிடு சித்தாந்தச் சமய ரெல்லாந்
தலைகீழாய் மாறிட்டுத்தருக்கித் தாடச்
சுத்தமென்னன் பரவெளியைச் சொந்த மாக்கி
சுகமுடனங் கேய்ந்ததுவுஞ் சுபமோ வம்மா. (கச)

எண்ணிலா மனிதரையீ டேற்ற முன்னாள்
எழிலிறையா யிருந்தகுரு பிரமா நந்தா
எண்ணிலா அன்பர்களும் ஏனையோரும்
இருகண்ணீர் ததும்ப விந்நா ளேங்கி நின்றே
எண்ணிலா ஒளிமலர்கை யேந்திப் பொற்றாள்
இறைத்திறைத்துக் கம்பியா தேத்தி மேலும்
எண்ணிலாம் நன்மைகொளச் சிக்கத் தம்பூர்
இன்பமுறக் கோயில்கொண்டாய் இனிதே யப்பா. (கரு)

நானிலத்தில் உபதேசம் நல்கல் ஓர்ந்தே
நாகருனை யடைந் தனரேல் பிரமான ந்தா
மேனிலத்தில் உனைக்கொண்டு போவதெங்கே
வீணுரு மவருடைய விவேகம் அம்மா
கானிலத்தில் படரார்வாழ் கைவல் யப்பேர்க்
ககனவட்டப் பெருவெளியிற் கலந்த பின்னர்
வானிலத்தில் வருதியோ வாராயன்றோ
மதியுடையாய் துதியுடையாய் மௌனவானே. (கசா)

அறந்துற வாதாரெண் டுணைவ ரான
தொண்டர்முதல் யாருமின்பு துய்க்கும் வண்ணம்
பறந்துபர வாநின்ற பட்சி போலப்
பரவுபல நீபணித்த பரநூற் சீரால்
இறந்துமிற வாதாரில் ஏய்ந்தாய் இந்நாள்
இறையவப்ர மாநந்தா இகத்தில் வீணாய்
பிறந்துமிறந் தார்கள்மிகப் பிதற்று வார்நின்
பெருமையினை யறிவாரோ பேசில் அம்மா. (கஅ)

தஞ்சையினில் குருபிரமா நந்தா நீதான்
தாபித்த தகைமிகுசங் கரவி லாச
மிஞ்சுபுகழ் சாரதா மந்தி ரச்சீர்
விண்ணவரோர்ந் தவர்சுதன்மைத் தலைமைமேவ
வஞ்சமனத் துடன்விசும்பில் வருவித் தார்கொல்
மனங்கசிந்து மாந்தர்கண்ணீர் மழைமண் வீழ்த்தார்
எஞ்சலிலாப் பிரமநிலை ஏகிற் பின்னர்
எங்குருவு யெனவமர ரெண்ணா தென்னே. (கசு)

தஞ்சைநகர்ச் சங்கரவி லாச மென்னுஞ்
சாரதா மந்திரத்தைத் தாபித்தோனே
விஞ்சுபுகழ்க் குருபிரமா நந்த மேலோய்
விரும்பிநீ செய்தபல மேல்பேண் நூற்கள்
பஞ்சதசி விருத்திப்ர பாக ரஞ்சொற்
. பகர்யோகப் பிரதாப பால போதம்
நெஞ்சினில்வைத் தன்பரெலாம் நெகிழ்ந்து தேம்ப
நின்னிலையில் சேர்ந்ததுவும் நேர்மை யன்றே. (உ௦)

ஒருக்குமதி தரித்துமழு வேந்தி நால்வர்க்
கிரகசியஞ் சொற்றவேம திறையே யன்ன
பெருக்குபுகழ் படைத்தகுரு பிரமா நந்தா
பேசுமியோ கப்பிரதீ பிகைமண் பேண்தற்
றருக்கநூல் விசாரசா கரம்வி சார
சந்த்ரோத யமொடுசிவ ஞான போதம்
உருக்கமுறவி யற்றியன்பர் உளங்கொண் டேத்த
உனதுநிலை யுற்றதுவும் உரித்தே யம்மா. (உக)

பற்றதனை முற்றுவிட்ட பலர்கள் தம்மில்
பட்டினத்துப் பிள்ளையையே பகர்வர் மேலா
உற்றுணரி லவர்பெயர்முன் கேட்டா ருண்டால்
ஒருவருங்கண் டாரில்லை பிரமா நந்தா

இற்றுறந்தும் மோனமுற்றும் இருந்த நின்னை
  எல்லாருங் கண்ணுற்றார் இனிநின் இங்கே
செற்றமுள ரறியாத சீவன் முத்தி
  சேர்ந்தநின்சீர் யாவர்கொலே தெரிய கிற்பார். (௨௫)

அத்துவித மெனும்பயிருக் கழகார் வித்தே
  ஆரறிவார் நினதுவிளை யாட்டின் சித்தே
யுத்திதரு சொல்லெவர்க்கும் பகர்சீ மானே
  பாரெல்லாம் தொழுதேத்தும் பதியா னோனே
சித்தசுத்தி யடையவுப தேச மீந்தே
  தேசிகபிர் மாநந்த சிவத்தைச் சேர்ந்தாய்
பெத்தமுத்தி பெறுவதுவே பயனுஞ் சும்மா
  பேசுவதி லென்பயனோ பெரிது மம்மா. (௨௬)

இரங்கற்பா முற்றிற்று.

# இரதபந்தம்.




## வெண்பா.

வீடுயர்கூர்ப் புற்றிமைபொன் வேதமெண்ணன் சீர்சந்தஞ்
சேடுதனித் தென்னன்னர்வான் றேர்ச்சிமாண்—டேடிற்
றிருவர மேவவே செப்பிசைப் போருங்
குருபிர மானந்தற் கூடு. (உ௮)

## நடுச்சொல் அலங்காரம்.

அதியிடையெண் பாலதிதே யந்தமொப்பு வான்சா
மதிபிரதி சொன்மத்தி வைக்கில்—விதிக்கும்
இருநான் கிரட்டிப்பே றீந்தளிக்கும் என்றும்
பிரமானந் தக்குருவின் பேர்.

## குறிப்பு.

"அதி" என்னும் சொல் மத்தியில்

| | | | |
|---|---|---|---|
| எண்பால் = எட்டுப்பதி = | | அபதி. | இவைகளின் மத்தி எழுத்துக்களைச் சேர்க்கில் "பதினறுபேறு" என்று வருதல் காண்க. (௨௫) |
| அதி | ... | = அதிதி. | |
| தே | ... | = அனுதி. | |
| அந்தம் | ... | = அறுதி. | |
| மொப்புவான் | ... | = அபேதி. | |
| சா | ... | = அறுதி. | |

சீர்மிகுத்த குருபிரமா நந்தச் சீலா
  தெலுங்குவட மொழிஇங்க்லீஷ் தேர்ந்தாய் மேலா
ஏர்மிகுத்த யோகநிலை இயைந்தாய் மெல்ல
  இதுவுமொரு திருவிளையாட் டென்றே சொல்ல
நேர்மிகுத்த தொண்டரொடு நிலமுங் கோனும்
  நீடூழி வாழ்ந்திடுக நிலைத்துத் தானும்
நார்மிகுத்த பாக்களிவை நல்கி னேனே
  நாவலன்நா ராயணசா மிப்பேர் நானே. (௨௬)

ஓம்தத்சத்.

## குறிப்பு.

(௫) நேமி = சமுத்திரம்; பவ்வம் = சமுத்திரம் = நீர்க்குமிழி.
(௬) பதம் = சொல்; பதம் = பதவி.
(௭) வரை = அளக்கின்ற.
(௮) புகர் = சுக்கிரன்; குற்றம்.
(௯) சிக்கத்தம் = சிக்கலான அர்த்தம்.
(௧௦) மிருத்து = மரணம்.
(௧௧) வெண்ணீறு = திருமண்ணுக்கும் பொருந்தும்.
(௧௨) செவ்வுடை = காவியில்லாது போனலும் = செழுமையைக்காட்டும்.
(௧௪) கருமை = கார்மேகம்.
௧௫) (௧) எண்ணிலா = கருத்தில்லாத (௨) அனேக (௩) கருத்து நிலாவுகின்ற (௪) எண்ணில் ஆம்.
௧௯) சுதன்மை = தேவசபை.
௨௪) செப்பு + இசைப்பு + ஓரும்.

1-வது வெண்பா—(பக்கம்-௧).

# சிவலிங்கபந்தம்.




*ர = விட்டிசைத்து நேரசையாயினவாறு காண்க.

## 2-வது கலித்துறை—(பக்கம்-௧).

# சிவலிங்கபந்தம்.



# இரதபந்தம்.

௫-வது வெண்பா(பக்கம்-௫).

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பி | | | | | |
| | | | | ன் | ர | தி | | | | |
| | | | தி | ரு | மா | னே | ய் | | | |
| | | த் | வி | மே | ன | மோ | ர | தி | | |
| | தெ | ய் | வ | மி | ந் | நா | ளா | சி | ர் | |
| ர் | நே | வ | து | த் | த | ர் | வே | ர் | ய | சு |
| | ஸ் | வி | மெ | ய் | ச் | செ | வ் | வி | தே | |
| | | க | பு | ல் | சா | ச் | ய | தோ | | |
| | | | க | ம் | மி | ய | ந் | | | |
| | | | | ண் | பே | ற் | | | | |
| | | | | | சு | | | | | |
| | | | | வீ | | சொ | | | | |

# ஆருரைசக்ரபந்தம்.

கூ-வது கலித்துறை (பக்கம்-சு).



# இரதபந்தம்.

கரு-வது வெண்பா(பக்கம்—கம).



## எட்டாரசக்ரபந்தம்.

கக-வது அகவல் (பக்கம் கக).



# அட்டநாகபந்தம்.

௧௭-வது வெண்பா (பக்கம்-௧௨).



# இரட்டை நாகபந்தம்.

உ௦-வது அகவல் (பக்கம்-கச).



# பதுமபந்தம்.

௨௫-வது வெண்பா (பக்கம் ௧௧).



## அட்டதள பதுமபந்தம்.

உசு-வது கலித்துறை (பக்கம் கக).



# சதுரங்கபந்தம்.

உகூ-வது வெண்பா(பக்கம்-உஉ).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மா | பி | ர | மா | ந | ந் | த | வா |
| பி | ன் | த | த் | த | து | னீ | த |
| ர | த் | து | து | பி | ஞ் | ன் | ந் |
| மா | கு | க் | ய் | சோ | சீ | ந | ந |
| ந | த் | தே | ர் | ச் | ர் | ர | மா |
| ந் | ர | த | ந் | சு | ச் | ப | ர |
| த | ங் | கோ | ப | ர | னே | மா | பி |
| வா | த | ங் | ந | மா | ர | பி | மா |

## நான்காரைச்சக்ரபந்தம்.

௯௯-வது வெண்பா (பக்கம்-௨௫).



# விசித்திர இரட்டை நாகபந்தம்.

௬௭-வது வெண்பா (பக்கம்-௨௭).



சிவமயம்.

தஞ்சை

ஸ்ரீசங்கரவிலாசசாரதாமந்திர

# முதல்வருஷமகோற்சவத்தில்,

திருநெல்வேலி சிந்துபூந்துறை

பேன்ஷன்போலீஸ்இன்ஸ்பெக்டர்

ஸ்ரீமான்-B. B. நாராயணசுவாமிநாயுடு அவர்களியற்றிய

# வாழ்த்துப்பா.

## பதிகம்.

சங்க ரவிலாச சாரதா மந்திரத்தில்
பொங்க ரவிலாசம் பூண்டோன்போன்—றங்கு
கிருஷ்ணசா மிக்குரிசில் நாயகமாங் கீர்த்தி
வருட்டிறனு ளுடை வமைந்து. (க)

முதல்வருட உற்சவத்தை மூதறிஞர் பல்லோர்
இதமுறவி யாசங்க ளீய—பதமெதென
மண்ணவர் போற்ற மகிழ்ந்துநிறை வேற்றினன்
விண்ணவர் மெச்ச விரைந்து. (உ)

இச்சபையைத் தாபித்தோன் யாரென்னில் யாவருமே
மெச்சுபுகழ் வேதாந்த வித்தகனும்—நச்சுசுக
நேமியக வையம் நிவர்த்தியருக் கன்குப்புச்
சாமிமஹா ராஜகுருதான். (ங)

பஞ்சதசி விர்த்திப்ர பாகரம் தர்க்கநூல்
பொன்செய் சிவஞான போதமென்—மஞ்சுபுகழ்
யோகப்ர தாபங்கொள் ளொண்பால போதமட
யோகப்ர தீபிகையோ டு. (ச)

வடமொழியி னின்று மதிதமிழில் பாவ
விடமொழிய வன்னுன் விரித்தான்—மடமழிவி
சாரமுத லாக்கொண்ட சாகரஞ்சந்த் ரோதயமும்
ஆரமுத மாமண்கொள வாய்ந்து. (ரு)

அன்னவன் செய்த வரிய கிரந்தங்கள்
பன்னகமன் னுலும் பகர்வரிதே—பொன்னேடு
சன்மமுறு வாறு சனகர்க்கா வாலமர்நந்
தென்முகனு வுன்னுவோந் தேர்ந்து. (சு)

மூன்றுவகைச் சிந்தாந்த மூழ்கினரும் மோதரிமுன்
றேன்றுகரிக் கூட்டமுந் தொல்லைசெய்—தூன்றின்க
ராசனமுன் மானுமொத்தார் நங்குப்புச் சாமிமகா
ராஜகுரு வந்துதித்த ஞான்று. (எ)

பெருமங்க ளங்கலந்து பேரின்ப மோங்கும்
கருமங்க ளங்கலந்து கண்ணின்—றெருங்கிழந்து
தாமதியா தேகும் குருகுப்புச் சாமிராஜ்
பூமதிதா ணண்ணில்புகல். (அ)

## நடேச்சோல் அலங்காரம்.

தச்சன்கை கூட்டமளிதத்தை யிவை கட்பிரதி
மெச்சு சொலின் நட்டெழுத்தை மெய்யினல்கி—மிச்செழுத்தான்
ஏமமெனு மீந்தளிக்கும் ஏவுமெடுக் குங்குப்புச்
சாமிமகாராஜ்குருவின் றுள். (கூ)

தச்சன் = தபதி = ததி (காலம்) = ஏமமெனும்.
கை = கரம் = கம் (அறிவு) = ஈயும்.
கூட்டம் = சனம் = சம் (மங்களம்) = அளிக்கும்.
அளி = கருணை = கணை (அம்பு) = ஏவும்.
தத்தை = கிள்ளை = கிளை (சுற்றம்) = எடுக்கும்.

## நடேச்சோல் = பரனருள்.

சங்க ரவிலாச சாரதா மந்திரமும்
பொங்க முடனமைத்த புண்ணியனும்—புங்கமுறும்
அங்கத் தினரும் அண்டினரும் வாழ்கவொளி
தங்கத் தியென்மதிபோற் றுன். (கo)

உ

# இரதபந்தம்.




**வெண்பா.**

வீறுயர்கூர் விண்வேர்க்கொள் மேருவொத்த கல்விபுகுந்
தேறுயர்மாண் ஞானக்கண்ணீந்திடுகோ—பேறுமிக்கீய்ந்
துப்புசா மிக்கே புவிபுரை யாயொப்பு
குப்புசா மிக்குருவே கூறு.